வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390. ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 09.06.2025 திங்கட்கிழமை | இதழ் : 160 | பக்கங்கள் : 12

# மாகாண தேர்தலுக்கான அழுத்தத்தை ஐ.நா. ஆணையரிடம் கோரவேண்டும்!

## வடக்கு-கிழக்கு அரசியல், சிவில் தரப்புக்கு கலாநிதி தயான் ஜயதிலக ஆலோசனை

கொழும்பு, ஜூன் 09

**இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வோல்கர் டர்க்கிடம், வடக்கு - கிழக்கு அரசியல், சிவில் தரப்பினர் கூட்டிணைந்து மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு வலியுறுத்த வேண்டும் என்று இராஜதந்திரியும், அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜயதிலக வலியுறுத்தியுள்ளார்.**



பொறுப்புக்கூறலை முன்னிலைப்படுத்திய கோரிக்கைளை முன்னெடுத்தால் ஆட்சியில் உள்ள அநுர அரசாங்கம் சுயாட்சிக் கோரிக்கைக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

23ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளரின் விஜயம் குறித்து கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு விஜயம் செய்வதற்கு தீர்மானித்திருப்பது முக்கியமானதொரு விடயமாகும். அவர்

11

## கொரோனா பரவல் குறித்து வீண் அச்சம் தேவையில்லை

சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 09

கொரோனா பரவல் குறித்து வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவின் வைத்திய நிபுணர் அதுல லியனபத்திரன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது பரவிவரும் கொரோனா திரிபுகளுக்கு கடுமையான நோய் நிலைமைகளை ஏற்படுத்தக் கூடிய இயலுமைகள் கிடையாது.

2023ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர், கொரோனா தொற்றை சாதாரணமாக ஒரு சுவாச நோயாக உலக சுகாதார நிறுவனம் வகைப்படுத்தியுள்ளது.

சாதாரண சுவாச நோய்க்கான அறிகுறிகள் மற்றும் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்துவதைக்

11

## ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடர் 16ஆம் திகதி ஆரம்பம்

ஜெனீவா, ஜூன் 09

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 59ஆவது கூட்டத்தொடர் 16ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகி, ஜூலை மாதம் 9ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ரேர்க்கின் உலகளாவிய மனித உரிமைகள் நிலவரம் தொடர்பான அறிக்கையுடன் ஜெனீவாவில் ஆரம்பமாகவிருக்கும் இக்கூட்டத்தொடரின் விடயதான மற்றும் நேர ஒழுங்கு அட்டவணையில் இலங்கையுடன் தொடர்புடைய விடயங்கள் உள்வாங்கப்படவில்லை.

அதேவேளை, இக்கூட்டத்தொடருக்கு மத்தியில் எதிர்வரும் 23ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையாளர் நாட்டுக்கு வருகைதரவுள்ளார்.

இந்நிலையில்,

11

## 23ஆம் திகதி இலங்கை வருகிறார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையர்!

வடக்கு நிலைமைகளை நேரில் ஆராய்வார்



கொழும்பு, ஜூன் 09

இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க், வடக்குக்கும் நேரில் வந்து நிலைமைகளை ஆராயவுள்ளார்.

இதன்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன், மலையக மக்களின் நிலை பற்றியும் இலங்கைப் பயணத்தின் போது அவர் அவதானம் செலுத்துவார்

11

## காணிகள் பற்றிய வர்த்தமானி எப்போது இரத்து செய்யப்படும்?

திகதி அறிவிக்குமாறு நீதியமைச்சரிடம் கஜேந்திரகுமார் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஜூன் 09

வடக்கிலுள்ள காணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் எப்போது இரத்துச்செய்யப்படும் என குறித்த திகதியொன்றை அறிவிக்குமாறு குறுந்தகவல் ஊடாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் தான் கோரியிருப்பதாகவும், இதுபற்றி இன்று திங்கட்கிழமை பிரதமர் ஹரினி அமரசூரியவுடன் பேச விருப்பதாகவும் தமிழ்த் தேசிய மக்கள்

11

## ஆட்சியின் ஆறே மாதங்களில் பிடியை இழந்துள்ளது அரசு!

நாமல் ராஜபக்ஷ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன் 09

"நல்லாட்சியைக் கேட்டு ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எதிர்ப்புத் தெரிவித்த தேசிய மக்கள் சக்தி, இன்று வெறும் ஆறே மாதங்களில் நாட்டின் மீதான தனது பிடியை இழந்துவிட்டது" என்று பொதுஜன

11



## புதிய எரிபொருள் களஞ்சியம் காங்கேசன்துறையில் திறப்பு!

எரிசக்தி அமைச்சர் திறந்து வைத்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 09

காங்கேசன்துறையில் அமைக்கப்பட்டுள்ள புதிய எரிபொருள் களஞ்சியசாலையின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி கலந்துகொண்டு எரிபொருள் களஞ்சியசாலையைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப்

11

## நேரில் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் தாருங்கள்

ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் காணாமற்போனோரின் உறவுகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 09

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் இம்மாதம் நாட்டுக்கு வருகை தரவுள்ள நிலையில், அவ்வாறு வருகை தரும்போது முள்ளிவாய்க்காலுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும், தாம் அவரை நேரில் சந்தித்துக் கலந்துரையாடுவதற்கு சந்தர்ப்பம் அளிக்குமாறும் கோரி வடக்கு-கிழக்கு

11

## செம்மணி புதைகுழி தொடர்பில் விசேட கரிசனை கொண்டுள்ளோம்

நீதி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 09

அரியாலை - செம்மணியில் முன்னெடுக்கப்பட்டு வரும் மனிதப் புதைகுழி அகழ்வு குறித்து விசேட கரிசனைகளைக் கொண்டிருப்பதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாணம் - ஆனைப்பந்தி சிறி சிவகுருநாதர் சுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா நேற்றுக் காலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

### சிந்துஜா, வேணுஜா மரணத்துக்கு நீதி கோரி

# போராட்டத்தில் ஈடுபட்ட மூவர் மன்னார் பொலிஸாரால் கைது!

மன்னார், ஜூன் 09

மன்னார் பொது வைத்திய சாலையில் இடம்பெற்ற மகப்பேற்று சிகிச்சைகளின் போது மரணமடைந்த சிந்துஜா, பட்டித்தோட்டத்தை சேர்ந்த வேணுஜா மற்றும் அவரின் சிசுவின் மரணத்துக்கு நீதி கோரி இடம்பெற்ற போராட்டத்தில் பொதுமக்கள் சார்பாக முன்னின்று போராடியவர்கள் மூவர் நேற்று மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்ட விரோதமாக பொது மக்களை ஒன்று கூட்டியமை மற்றும் பொது சொத்துக்களை சேதப்படுத்தியமை உள்ளிட்ட பல பிரிவுகளில் குறித்த மூன்று இளைஞர்களும் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன்பாக பொது அழைப்பின் பெயரில் ஒன்று கூடிய பொதுமக்கள் மன்னார் பொது வைத்தியசாலையில் இடம்பெறும் பல்வேறு முறைகேடுகளுக்கு எதிராக அமைதியான போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

இந்த நிலையில் போராட்டக்காரர்களின் கோரிக்கை தொடர்பில் பல்வேறு வாக்குறுதிகள் அதிகாரிகளால் வழங்கப்பட்டபோதிலும் அதை ஏற்க மறுத்த சில போராட்டக்காரர்களால் போராட்டம் வன்முறையாக மாற்றம் அடைந்தது.

இதன்போது வீதிகளை மறித்தும் ரயர்களை கொளுத்தியும் போராட்டக்காரர்கள் சிலர் தங்கள் எதிர்ப்புக்களை தெரிவித்த நிலையில், போராட்டத்தில் சில விசமிகள் புகுந்து பொலிஸார் மீதும் வைத்தியசாலை மீதும் கல் வீச்சுக்களை மேற்கொண்டு போராட்டத்தை திசை திருப்பி இருந்தனர்.

இறுதியில் போராட்டம் சுமுகமான நிலையில் நிறைவடைந்தபோதிலும் மக்கள் சார்பாக போராட்டத்தில் கலந்துகொண்ட மூவரை பல மாதங்கள் கழித்து மன்னார் பொலிஸார் நேற்று கைது செய்தனர்.


சிந்துஜா மற்றும் வேணுஜாவின் மரணம் தொடர்பில் விசாரணைகள் இதுவரை முடிவுறுத்தப்படாத நிலையில் அவர்களுக்கு, அவர்களின் குடும்பங்களுக்கு நீதி கிடைக்காத நிலையில் அவர்கள் சார்பாக போராடிய மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளமை மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

(அ)

# தனியார் காணியில் துப்பாக்கிகள் மீட்பு!

வவுனியா, ஜூன் 09

வவுனியா - இறம்பைக்குளம் பகுதியில் தனியார் காணி ஒன்றில் இருந்து பழுதடைந்த நிலையில் காணப்பட்ட இரு துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.



நேற்று காலை குறித்த காணியில் அதன் உரிமையாளர்களால் அபிவிருத்திப் பணிகளை செய்வதற்காக ஜே.சி.பி. இயந்திரம் மூலம் அகழப்பட்டுள்ளது.

இதன்போது மண்ணில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட இரண்டு ரி-56 ரக துப்பாக்கிகள் மற்றும் அதற்கு பயன்படும் 450 ரவைகள் தென்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து, சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் ஆயுதங்களை அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதேவேளை குறித்த பகுதியில் 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இந்திய இராணுவத்தின் முகாம் ஒன்று இயங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

(அ)

# செம்பியன்பற்றுப் பகுதியில் மீனவரின் வாடிக்கு தீ வைப்பு!



யாழ்ப்பாணம், ஜூன் 09

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று பகுதியில் மீனவர்கள் மத்தியில் இடம்பெற்ற முறுகலை தொடர்ந்து நேற்று முன் தினம் இரவு கரைவலை வாடி ஒன்றுக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

செம்பியன்பற்று பகுதியில் உழவியந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து குறித்த பகுதியில் உழவியந்திரம் பாவித்து கரைவலை தொழில் செய்து வந்தவர்களை அகற்றும் செயற்பாடுகளில் அதிகாரிகள் ஈடுபட்டனர். இந்த நடவடிக்கையின்போது மீனவர்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டிருந்ததைத் தொடர்ந்து, நேற்று முன் தினம் இரவு செம்பியன்பற்று பகுதியில் உள்ள கரைவலை வாடி ஒன்றுக்கு விசமிகளால் தீ வைக்கப்பட்டுள்ளது.

இதில் இரண்டு இலட்சம் பெறுமதியான கடல் தொழில் உபகரணங்கள் முற்றாக நாசமாகியுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-02)

# அர்ச்சுனா எம்.பியின் கருத்து; எச்சரிக்கிறார் சரத் வீரசேகர



கொழும்பு, ஜூன் 09

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் தமது தேசியத் தலைவர் என்று பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா தொடர்ச்சியாக குறிப்பிடுவது தொடர்பில் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் அதிருப்திக்குரியன என முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது-

பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனின் கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகள் வடக்குக்கும், தெற்குக்கும் இடையில் வீண் பிரச்னைகளை ஏற்படுத்தும் வகையில் உள்ளன.

பிரபாகரன் தமது தேசியத் தலைவர் என்று குறிப்பிட்டு பாராளுமன்றத்தில் உரையாற்றுகிறார். இது அரசியலமைப்புக்கு முற்றிலும் விரோதமானது.

அர்ச்சுனாவின் கருத்துக்களை அரசாங்கம் அலட்சியப்படுத்துகிறது.

300 கொள்கலன்களில் பிரபாகரனின் ஆயுதங்கள் நாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், தமிழ் டயஸ் போராக்களிடமிருந்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நிதி பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் உண்மைத்தன்மை என்னவென்பதை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்.

பாராளுமன்ற சிறப்புரிமையில் இருந்துக் கொண்டு விரும்பிய அனைத்தையும் குறிப்பிட முடியாது. அர்ச்சுனா குறிப்பிட்டுள்ள விடயங்கள் முன்னாள் போராளிகளுக்கும் உத்வேகமளிக்கும் வகையில் அமையும்.

அர்ச்சுனாவின் முறையற்ற கருத்துக்கள் வடக்கு காணி விடுவிப்பு மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடுவிப்புக்கு தடையாக அமையலாம் - என்றார்.

# மதுபானசாலை அனுமதிக்கு பணம் வவுனியாவில் ஒருவர் கைதாகினார்!

வவுனியா, ஜூன் 09

மதுபானச்சாலைக்கான அனுமதிப் பத்திரம் வழங்குவது தொடர்பில் பணம் பெற்றுக் கொண்டு காசோலை கொடுத்தமை தொடர்பில், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக வவுனியா நிதி மோசடி குற்றப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில், முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம் மதுபானச்சாலைக்கான அனுமதிப் பத்திரம் பெற்றுத் தருவதாக கூறி, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனுடன் இணைந்து செயற்பட்ட கட்சி உறுப்பினர் ஒருவர், ஒரு கோடியே 80 இலட்சம் ரூபா பணத்தை பெற்றுள்ளார்.

அதற்கு பொறுப்பாக தனது காசோலையை அவர் வழங்கியிருந்தார்.

மதுபானச்சாலை அனுமதிப் பத்திரம் கிடைக்காத நிலையில், குறித்த காசோலையை வங்கியில் வைப்பிட்டபோது, அதில் பணம் இல்லை எனத் தெரிவித்து வங்கி திருப்பியனுப்பியது.

அதனால் பாதிக்கப்பட்ட தரப்பினர், வவுனியா பொலிஸ் நிதி மோசடி குற்றப் பிரிவில் செய்த முறைப்பாட்டை அடுத்து, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் முன்னாள் உறுப்பினர் கைது செய்யப்பட்டார்.

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த நபர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும், நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகவும், நிதி மோசடி குற்றப் பிரிவு பொலிஸார் குறிப்பிட்டனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
09.06.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், வைகாசி 26

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 205 2300**

# தோல்வியுற்றிருப்பது அரசியல் கட்சிகள் மட்டுமல்ல

இலங்கை தமிழ் அரசு கட்சியின் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்துப் பேசியமை, அதேபோன்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தன் டக்ளஸ் தேவானந்தாவோடு பேசிய விடயங்கள் தொடர்பில் அதிகம் பேசப்படுகின்றது. மறுபுறம் இது ஓர் உண்மையை வெளிப்படுத்துகின்றது. அதாவது, தமிழ் அரசியல் சூழலில் உருப்படியாக எதுவும் நடக்கப் போவதில்லை என்பதையே சில நாட்களாக இடம்பெற்றுவரும் அரசியல் உரையாடல்கள் வெளிப்படுத்துகின்றன. கடந்த காலத்திலிருந்து எதனையும் கற்றுக்கொள்ளவோ கற்றுக்கொண்டவற்றை முன்வைத்து செயல்படும் எண்ணமோ எவரிடமும் இல்லை.

இந்த நிலைமைக்கு வெறுமனே அரசியல்வாதிகளை மட்டும் குற்றம் சாட்ட முடியாது, சரியான விடயங்களை பொருத்தமான தருணங்களில் இடித்துரைக்க வேண்டியது கருத்துருவாக்கிகள், புத்திஜீவிகள், சிவில் சமூகத்தினர் ஆகியோர் அனைவருடைய தோல்வியாகவே இதனை நோக்க வேண்டும்.

எனவே கடந்த எழுபத்தைந்து வருடகாலத் தோல்வி என்பது அனைவருடைய தோல்வியும்தான். இதற்கு என்ன காரணம்? அரசியலை வெறுமனே அரசியல்வாதிகளிடம் மட்டுமே விட்டுவிட்டு, அவர்களின் செயல்பாடுகளுக்கு, நிலைப்பாடுகளுக்கு விளக்கவுரை வழங்கும் பணிகளையே கருத்துருவாக்கிகள், புத்திஜீவிகள் என்போர் ஆற்றிவந்தனர். ஆயுதப் போராட்டம் இடம்பெற்ற காலத்தில் இந்த நிலைமை இன்னும் மோசமானதாகவே இருந்தது. ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீதான விமர்சனம் ஒரு தேச விரோத செயல்பாடாகவே நோக்கப்பட்டது. இதன் கரணமாகவே தூரநோக்குடன் விடயங்களை முன்வைத்தவர்கள் ஒதுங்குவதற்கு நிர்பந்திக்கப்பட்டனர். பலர் அரசியலே வேண்டாமென்று ஒதுங்கிக் கொண்டனர்.

2009, மே மாதம் அனைத்து விதமான நம்பிக்கைகளுக்கும், வீர வாதங்களுக்கும் முற்றுப்புள்ளியிட்ட பின்னரும் கூட, அரசியலை புதிய கோணத்தில் அணுகுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் தற்துணிபுள்ள அரசியல் தலைவர்கள் எவருமே வெளித்தெரியவில்லை. கருத்துருவாக்கத் தளத்தில் சில விடயங்கள் முன்வைக்கப்பட்ட போதிலும் கூட, அவைகள் சிறுபான்மை வாதங்களாகவே சுருங்கிப்போனது.

ஒரு பேரழிவிற்கு பின்னர் எவ்வாறு சிந்திக்க வேண்டும், எவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் தங்களை ஓர் ஐக்கிய முன்னணியாக்கிக் கொள்ள வேண்டும் என்பது பற்றிச் சிந்திப்பதற்கும், அதனடிப்படையில் செயலாற்றுவதற்கும் எவரும் முன்வரவில்லை. களத்திலும் புலத்திலும் தமிழ்த் தேசியத்தின் பெயரால் போலித்தனங்களும் பொய்யான அரசியல் கதைகளுமே மேலாதிக்கம்பெற்றது. இதனால், மேலும் மேலும் ஐக்கியப்பட வேண்டியவர்களோ, மேலும் மேலும் பிளவுற்று, தங்களுக்குள் எதிரிகளை உருவாக்கிக் கொள்வதில் திருப்தியுற்றனர். இதன் ஒட்டு மொத்த விளைவுதான் இன்றை கையறு நிலைமை.

இன்று தமிழர்களுக்கு என்று ஓர் அரசியல் தலைமை இல்லை. அண்மைக்காலத்தில் அவ்வாறானதொரு அரசியல் தலைமை உருவாகுவதற்கான அரசியல் சூழலும் தென்படவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் உள்ளூராட்சிச் சபைகளை அமைப்பதில் மல்லுக்கட்டுகின்றனர்.

இந்தப் பின்புலத்தில் நோக்கினால் எதிர்காலம் மிகவும் சிக்கலானதாக தெரிகின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் ஈழத் தமிழர் அரசியல் என்பது வெறும் சம்பிரதாயபூர்வமான உச்சரிப்புக்களுடன் சுருங்கிவிடும். இதனைப் புரிந்து கொண்டு, இன்றுள்ள தலைவர்கள் என்போர், தங்களுடைய காலத்தில் ஆகக் கூடியது தங்களால் என்ன செய்ய முடியுமோ அதனைப் பற்றி மட்டுமே சிந்திக்க வேண்டும். இன்றுள்ள அரசியல் கட்சிகளின் தலைவர்கள் என்போரின் காலம் பெருமளவிற்கு முடிந்துவிட்டது. அரசியல் சிந்தனையாளர்கள், புத்திஜீவிகள் என்போர் இந்த அடிப்படையில் சிந்திக்கவும், அரசியல் கட்சிகளை நோக்கி கேள்விகளை எழுப்பவும் வேண்டும். அரசியல்வாதிகளுக்கு எதிர்வினையாற்றும் பாரம்பரிய கருத்துருவாக்கங்கள் காலாவதியாகிவிட்டன.

# தையிட்டி விகாரைக்கு ஆயிரக்கணக்கில் சிங்கள மக்களை அழைத்து வரத்திட்டம்

## முன்னாள் எம். பி. கஜேந்திரன் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 09

இனவாதிகள் தென்பகுதியிலிருந்து பெருமளவு அப்பாவி சிங்கள மக்களை நாளை 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை போயா தினத்தன்று தையிட்டி சட்ட விரோத விகாரைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அறியமுடிகின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

தையிட்டியிலே தமிழ் மக்களின் பூர்வீகக்காணிகளை சட்டவிரோதமாக அபகரித்து அங்கே ஒரு விகாரை அமைக்கப்பட்டிருப்பது எல்லோருக்கும் தெரியும்.

சட்டவிரோத கட்டுமானம் அகற்றப்பட்டு அந்தக் காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்பது அந்தக் காணி உரிமையாளர்களினதும் அரசியல் தரப்புகளினதும் சிவில் தரப்புகளினதும் கோரிக்கையாக உள்ளது.

அதனை வலியுறுத்தி கடந்த 2023 மே மாதம் முதல் தொடர்ச்சியாக போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையிலே நாளை செவ்வாய்க்கிழமையும் அங்கு போராட்டம் நடைபெறவுள்ளது.

அங்கே வருகின்ற சிங்கள மக்களுக்கு உண்மையில் அங்கே என்ன நடக்கின்றது என்பது கூடத் தெரியாது.

இனவாதிகள் தென்பகுதியில் சொல்கின்ற பொய்க் கதைகளை நம்பி மக்கள் இங்கு வந்துகொண்டிருக்கின்றார்கள்.

உண்மைகளை அவர்களுக்கு தெரிவிக்க வேண்டும். இது ஒரு சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடம் என்பதையும், அது அகற்றப்பட வேண்டும் என்பதையும், இவ்வாறு தமிழ் மக்களின் காணிகள் அமைக்கப்பட்டு விகாரைகள் அமைக்கப்படுவதனால் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சமும் வெறுப்பும் வளர்க்கப்படுகின்றது.

எனவே, சிங்கள மக்கள் இவ்வாறான சட்டவிரோத செயல்பாடுகளுக்கு துணை போகக்கூடாது.

சிங்கள மக்களும் எங்களுக்கு ஒத்துழைத்து வழங்கி இனவாதிகளுக்கு அழுத்தங்களை கொடுத்து தமிழ் மக்களின் காணிகளை விடுவிப்பதற்கும் இந்த சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றுவதற்கும் சிங்கள மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் எங்களுக்கு உள்ளது.

காணி உரிமையாளர்களுடன் சேர்ந்து நாளை கவனவீர்ப்புப் போராட்டத்தை ஏற்பாடு செய்திருக்கின்றோம். இந்த போராட்டத்திலே தமிழ் மக்களும் பெருமளவில் கலந்துகொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றோம்.

இதேவேளை அன்றைய தினத்தன்று இனவாதிகள் தென்பகுதியிலிருந்து பெரு மளவு அப்பாவி சிங்கள மக்களை அழைத்துவருவ தற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

அவர்கள் அந்த பொது மக்களை எந்த நோக்கத்துக்காக அழைத்து வருகின்றார்கள் என்பது எமக்குத் தெரியவில்லை. இருந்தாலும் நாங்கள் வழமை போன்று அமைதியான முறையிலே நீதிமன்ற கட்டளைகளுக்கு மதிப்பளித்து போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

இந்தப் போராட்டத்துக்கு அனைத்து தமிழ் மக்களின் ஆதரவைவும் நாங்கள் கோரி நிற்கின்றோம்.

போராட்டத்தின் ஊடாக சர்வதேச சமூகத்தின் ஆதரவோடு இந்தக் காணிகளை மீளப்பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பிருக்கின்றது. எனவே, மக்கள் நம்பிக்கையுடன் இந்த போராட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்- என்றார். (எ)

# மரை இறைச்சி, துப்பாக்கி உள்ளிட்ட பல்வேறு பொருட்களுடன் மூவர் கைது!

மன்னார், ஜூன் 09

மன்னார், மடு வீதி தேசிய பூங்காவில் மரை இறைச்சி மற்றும் துப்பாக்கி உள்ளிட்ட பல்வேறு பொருட்களுடன் மூன்று சந்தேக நபர்கள் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த 6 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 42 கிலோ மரை இறைச்சி, துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் கத்தி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் மூவரும் நீண்ட காலமாக மடு வீதி தேசிய பூங்காவில் விலங்குகளை வேட்டியாடுவதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் மன்னார் நீதிவான் நீதிமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை முற்படுத்தப்பட்டதையடுத்து 2 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜூன் - 09 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம் - வைகாசி 26
நல்ல நேரம்:6.00 - 7.30
ராகு காலம்:7.30 - 9.00
திதி: சதுர்த்தசி




**மேடம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். ஆடை ஆபரணங்கள் புதிதாக வாங்குவீர்கள். கல்யாணப் பேச்சுவார்த்தை சாதகமாக முடிவடையும்.

**இடபம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**மிதுனம்**
புதிய திட்டங்களை தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உத்தியோகம் உயர் கல்வி பற்றி யோசிப்பீர்கள். அவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு.

**கடகம்**
பழைய பிரச்னைகளுக்கு சுமூக தீர்வு காண்பீர்கள். தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். மகளுக்கு நல்ல வரன் அமையும். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
கம்பீரமாக பேசி சில காரியங்களை முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பயனடைவீர்கள். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்- மனைவிக்குள் இருந்து வந்த பிரச்னைகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். நல்லன நடக்கும் நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஓய்வின்றி உழைக்க வேண்டி இருக்கும். மன இறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள்.

**விருச்சிகம்**
எளிதாக முடிய வேண்டிய விஷயங்கள் கூட பல முறை போராடி முடிப்பீர்கள். பிள்ளைகளின் உணர்வுகளை புரிந்து கொள்ளுங்கள். கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சாதித்து காட்டும் நாள்.

**தனுசு**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மதிப்புக் கூடும் நாள்.

**மகரம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளால் மதிப்பு கூடும். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள்.

**கும்பம்**
இதுவரை இருந்த அலைச்சல்கள் நீங்கி குடும்பத்தாரின் ஆதரவு பெருகும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள். சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிக்கப் பாருங்கள். பிரச்னைகள் வரும். கவனம் தேவைப்படும் நாள்.

# முற்றாக முடங்கும் அபாயத்தில் புற்றுநோய் மருத்துவமனை!

## மருத்துவர் கிருஷாந்தியின் பாதுகாப்பு, பணிச் சுதந்திரத்தை உறுதி செய்யவும்

யாழ்ப்பாணம், ஜூன் 09

தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனையும் அதன் சேவைகளும் முற்றாக முடங்கும் அபாயத்தில் உள்ளதாக எச்சரிக்கை விடுத்துள்ள அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், புற்றுநோய் நிபுணர் வைத்தியர் கிருஷாந்தியின் பாதுகாப்பும் பணிச் சுதந்திரமும் உறுதி செய்யப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தின் முக்கிய புற்றுநோய் சிகிச்சை மையமாக விளங்கும் தெல்லிப்பழை புற்றுநோய் மருத்துவமனைக்கு எதிரான திட்டமிட்ட முயற்சிகள், தற்போது அதன் இயங்கு திறனை முற்றாக பாதிக்கும் நிலையை நோக்கி நகர்ந்துள்ளன.

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன் பொதுமக்கள், தன்னார்வ அமைப்புகள் மற்றும் சில அனுசரணையாளர்களின் கடுமையான உழைப்பின் ஊடாக நிறுவப்பட்ட இந்த மருத்துவமனை, இன்று வரை ஆயிரக்கணக்கான புற்றுநோயாளிகளுக்கு உயிருக்குப் போராடும் வாழ்வாதார சிகிச்சையைக் வழங்கி வருகிறது. ஆனால், அப்போதும் இப்போதும் தொடர்ந்து சிலர் மேற்கொள்ளும் மறைமுகமான நடவடிக்கைகள், வஞ்சக போக்குகள் மற்றும் திட்டமிட்ட இடையூறுகள் இதன் நிரந்தர மேம்பாட்டுக்கும் சேவைக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்தி வருகின்றன.

தற்போது, பல ஆண்டுகளாக புற்றுநோயாளர்களுக்காக அர்ப்பணிப்போடு பணியாற்றி வரும் புற்றுநோய் மருத்துவ நிபுணர் கிருஷாந்திக்கு எதிராக நடக்கும் அவதூறு பரப்பல், வசைபாடல்கள் மற்றும் தனிப்பட்ட தாக்குதல்களை எமது சங்கம் கடுமையாகக் கண்டிக்கின்றது.

அவரை மனதளவில் பாதித்து, சேவையிலிருந்து பின்வாங்க வைக்கவே இது மேற்கொள்ளப்படுவதாக எமது சங்கம் தெளிவாக அறிந்து வருகின்றது.

எனவே, மருத்துவர் கிருஷாந்தியின் பாதுகாப்பும் பணிச் சுதந்திரமும் உறுதி செய்யப்பட வேண்டும் என்பதை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வலியுறுத்துகிறது. மேலும் அவதூறு பரப்பும் நபர்களுக்கு எதிராக உடனடியாக நிர்வாக, சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மற்றும் தெல்லிப்பளை மருத்துவமனை மற்றும் அதன் அனைத்துப் பிரிவுகளும் புற்றுநோய் சிகிச்சை பிரிவு உள்ளடங்கலாக பாதுகாக்கப்பட்டு மேம்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் நோயாளர்களுக்கான உயர்தர சிகிச்சைகள் அரச மருத்துவமனையில் தொடர வேண்டும் என்பதற்காக, எதிர்வரும் நாட்களில் தொழிற்சங்க நடவடிக்கைகள் அவசியமானால் தீவிரப்படுத்தப்படும்.

நமது நோக்கம் உன்னத நோக்கம் கொண்ட தனி நபர்களை காப்பது மட்டுமல்ல் நோயாளியின் உரிமைகள், வாழ்க்கைத் தரம் மற்றும் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# அதிக மாத்திரைகளை உட்கொண்ட முதியவர் ஒருவர் யாழில் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ்ப்பாணத்தில் அளவுக்கு அதிகமாக மாத்திரைகளை உட்கொண்ட முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்தார். இதன்போது கீரிமலை வீதி, சித்தங்கேணி பகுதியைச் சேர்ந்த நல்லையா இராசலிங்கம் (வயது -77) என்ற முதியவரே உயிரிழந்தார்.

குறித்த முதியவர் கடந்த நான்காம் திகதி மதுபோதையில் மாத்திரைகளை அளவுக்கு அதிகமாக உட்கொண்டார். பின்னர் அவரது மனைவி ஐந்தாம் திகதி அதிகாலை அவரை எழுப்பினார். அவர் மயக்கமடைந்து காணப்பட்டதால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டார்.

தொடர்ந்து மயக்க நிலையிலேயே காணப்பட்ட குறித்த முதியவர் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

மருந்துகளை அளவுக்கதிகமாக உட்கொண்டதால் மரணம் சம்பவித்ததாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்தது.

(எ-05)

# யாழில் கோர விபத்து, இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 09

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு அண்மையில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர்.

துவிச்சக்கர வண்டியில் வந்த இருவர் மீது வாகனம் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(எ-05)






பி. எல். சி. கம்பஸின்" இணைவு விழா யாழ். வலம்புரி ஹோட்டலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில், பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் சான்றிதழ்களை வழங்கினார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகளை சட்டரீதியாக அழைத்துவருவதற்கு ஏற்பாடு!

## மீன்பிடி அமைச்சர் சந்திரசேகர் தகவல்

கொழும்பு, ஜூன் 09

**இந்தியாவில் நீண்ட காலமாக தங்கியுள்ள இலங்கை அகதிகளை சட்டரீதியாக அழைத்து வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.**

அண்மையில் இந்தியாவிலிருந்து கடல் வழியாக யாழ்ப்பாணம் வருகை தந்த அகதி ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எமது கட்சி கடந்த காலங்களில் இலங்கையில் இருந்து சென்ற தமிழ் அகதிகளுக்கு பிரஜா உரிமை வழங்கவேண்டும் என பாராளுமன்றத்தில் வலியுறுத்திப் பேசினோம்.

இந்தியாவில் தங்கி உள்ள அகதிகள் இலங்கை வருவதற்கு சட்ட ரீதியான ஆவணம் ஒரு பிரச்னையாக உள்ள நிலையில் சிலர் கடல் வழியாக சட்ட விரோதமான முறையில் படகுகள் மூலம் நாட்டுக்கு மீள வருகிறார்கள்.

அரசாங்கம் என்ற வகையில் எமது நாட்டிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களை சட்ட ரீதியாக நாட்டுக்கு அழைத்து வருவதற்கான ஏற்பாடுகளை வெளிவிவகார அமைச்சினூடாக எடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசாங்கம் மேற்கொண்டு வருகிறது.



ஆகவே இந்தியாவிலிருந்து படகு மூலம் சட்டவிரோதமான முறையில் இலங்கை திரும்ப வேண்டாம் என கேட்டுக் கொள்வதோடு விரைவில் அவர்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்-என்றார். (அ)

# 1200 ரயில் கடவைகள் பாதுகாப்பற்ற நிலையில்!

கொழும்பு, ஜூன் 09

ரயில் கடவைகளில் ஏற்படும் விபத்துக்களில் பெரும்பாலானவை பாதுகாப்பு முறைமைகள் கொண்ட ரயில் கடவைகளில் நிகழ்ந்துள்ளதாக கோபா குழுவில் தெரியவந்துள்ளது.

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அல்லது கோபா குழு முன்னிலையில், ரயில்வே திணைக்கள அதிகாரிகள் சமீபத்தில் அழைக்கப்பட்டபோது இந்த விடயம் தெரியவந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தக் குழுவின் உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் சந்தன சூரியபண்டார, ரயில் கடவைகளில் ஏற்படும் விபத்துக்கள் தொடர்பாக ரயில்வே திணைக்கள அதிகாரிகளிடம் வினவியிருந்தார்.

அதற்கு பதிலளித்த ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர, நாட்டில் சுமார் 1200 பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் உள்ளதாக தெரிவித்தார்.

இதனிடையே, ,தன்போது கருத்து தெரிவித்த ரயில்வே திணைக்களத்தின் இயந்திரவியல் பிரிவின் மேலதிக பொது முகாமையாளர் கே.கே. ஹேவாவிதாரண, 5 புதிய ரயில் பெட்டிக் கட்டமைப்புகளை கொள்முதல் செய்ய அனுமதி கிடைத்துள்ளதாக கூறினார்.

அந்த ரயில் பெட்டிகள் அனைத்தும் மூன்றாம் வகுப்பு குளிரூட்டப்பட்ட பெட்டிகளைக் கொண்டவை என கே.கே. ஹேவாவிதாரண தெரிவித்தார். (அ)

# உரிய முறையில் பதவி விலகாத முப்படையினர் 3000 பேர் கைது!

கொழும்பு, ஜூன் 09

முறையாக பதவி விலகாது பணிக்கு சமூகமளிக்கத் தவறிய முப்படையைச் சேர்ந்த 3000 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் முப்படைகளும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்களில் 2,261 பேர் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முப்படைகளின் ஒழுக்கத்தை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# விசேட பரிசோதனைக்குட்படுத்தப்படும் ரயில் நிலைய சமிக்ஞை கட்டமைப்புகள்!

கொழும்பு, ஜூன் 09

நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து ரயில் நிலையங்களினதும் சமிக்ஞை கட்டமைப்புகள் விசேட பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி, கரையோர மார்க்கத்தில் கொழும்பு கோட்டையிலிருந்து களுத் துறை வரையான ரயில் சமிக்ஞை கட்டமைப்பில் நேற்றும் இன்று பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக் கப்படுகின்றன.

அத்துடன், பாணந்துறையிலிருந்து மொறட்டுவை வரையிலான ரயில் மார்க்கத்தின் சமிக்ஞை கட்டமைப்புகள் சீராக உள்ளதாக அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாணந்துறை மற்றும் எகொட உயன ரயில் நிலையங்களுக்கு இடையிலான பகுதியில் உள்ள தண்டவாளத்தில் ஏற்பட்ட பழுது காரணமாகக் கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த சகரிக்கா ரயில் நேற்று முன் தினம் முற்பகல் இடைநடுவே நிறுத்தப்பட்டது.

எனினும் சமிக்ஞை கோளாறு காரணமாகக் கொழும்பு கோட்டை நோக்கிப் பயணித்த மற்றுமொரு ரயிலே அதே மார்க்கத்தில் பயணித்தது.

பின்னர் அதன் இயக்குநரின் உடனடி நடவடிக்கையால் குறித்த ரயில் நிறுத்தப்பட்டதுடன் ஏற்படவிருந்த விபத்தும் தவிர்க்கப்பட்டது.

இந்தநிலையில், நாடளாவிய ரீதியாக உள்ள சகல ரயில் மார்க்கத்திலும் காணப்படும் சமிக்ஞை கட்டமைப்புகளைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கோவில், விகாரைகளுக்கு விரையும் அரசியல்வாதிகள்

கொழும்பு, ஜூன் 09

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் உயர் அரசு அதிகாரிகள் உட்பட ஐம்பதுக்கும் மேற்பட்ட அரசியல்வாதிகள் சமீபத்திய நாட்களில் விகாரைகள் மற்றும் கோவில்களுக்குச் சென்று பிரார்த்தனை செய்து ஆசி பெற்றுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பிரார்த்தனை செய்தவர்களில் பெரும்பாலோர் பல்வேறு ஊழல் மற்றும் சட்டவிரோத குற்றச்சாட்டுகளுக்கு ஆளானவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்திய நாட்களில் இருபதுக்கும் மேற்பட்ட முன்னாள் அரசியல்வாதிகள் கதிர்காமம் கோயிலுக்கு மட்டும் சென்று பிரார்த்தனை செய்துள்ளதாக ஆலய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், பல்வேறு குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டுள்ள ஒரு உயர் அரச அதிகாரி, சிறப்பு பாதுகாப்புடன் அனுராதபுரம் ஜெய ஸ்ரீ மஹா போதி தேரரை சந்தித்து, அப்பகுதியின் முன்னணி துறவிகளைச் சந்தித்து ஆசி பெற்றதாக கூறப்படுகிறது.

இதேபோல், இந்தியாவுக்குச் சென்ற முன்னாள் அரசியல்வாதி ஒருவர் அங்குள்ள ஒரு கோவிலில் பெரிய அளவிலான பிரார்த்தனை நடத்தி ஆசி பெற்றுள்ளார்.

பல்வேறு ஊழல்கள் மற்றும் பிற முறைகேடுகள் தொடர்பாக அரசியல்வாதிகள் உட்பட கிட்டத்தட்ட இருபது அரசு அதிகாரிகள் சமீபத்திய நாட்களில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு சலுகை



கொழும்பு, ஜூன் 09

ரயில் பயணத்தின் போது, மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்பு சலுகைகளை வழங்குவதற்கு திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என ரயில்வே துறை தெரிவித்துள்ளது.

ரயில்களில் நுழையும் போதும், வெளியேறும் போதும் ஊழியர்களிடமிருந்து உதவி பெற வாய்ப்பு கிடைக்கும் என்று ரயில்வே பொது மேலாளர் தம்மிக ஜெயசுந்தர தெரிவித்தார்.

அதன்படி, 1971 என்ற தொலைபேசி எண்ணை அழைத்து முன்கூட்டியே அறிவிக்கவேண்டும்.

இந்த முறை எதிர்வரும் 15ஆம் திகதி முதல் செயல்படுத்தப்படும் என்று ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (அ)

# கைதிக்குப் பொதுமன்னிப்பு உள்ளக விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஜூன். 09

ஜனாதிபதி பொதுமன்னிப்பு அளித்துள்ளவர்களின் பட்டியலில் முறைகேடுகள் இடம்பெற்றனவா என்பது தொடர்பில் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அநுதாரபுரம் மேல் நீதிமன்றத்தில் எச்.சி 69 20 18 இலக்க வழக்கில் 2025.05.02 ஆம் திகதியன்று தண்டனைச் சட்டக்கோவை 386 பிரிவின் பிரகாரம் அதுல சேனாரத்ன என்பவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நபருக்கு 2025.05.12 ஆம் திகதி வெசாக் தினத்தன்று ஜனாதிபதியால் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் 2025.05.02 சிறை தண்டனை விதிக்கப்பட்ட நபருக்கு 2025.05.12 ஆம் திகதியன்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பொதுமன்னிப்பு வழங்கியுள்ளமை பாரதூரமான விடயமாகும் என ஐக்கிய மக் கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா பாரா ளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

இதுதொடர்பில் நீதியமைச்சரிடம் வினவப்பட்டபோது, “அரசியலமைப்பின் 34 இன் ஒன்று பிரிவின் படி, கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது. அதன்படி, சிறைச்சாலை அதிகாரிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட கைதிகளின் பட்டியல் நீதி அமைச்சுக்கு அனுப்பப்படும். இந்தப் பட்டியல் நீதி அமைச்சினால் பரிசீலிக்கப்பட்டு ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பப்படுகிறது. அதன்படி, ஜனாதிபதியின் அனுமதியுடன், குறித்த கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும்.

இத்தகைய நியமங்கள் பின்பற்றப்படுகின்ற நிலையில் தற்போது குறித்தவொரு நபரின் பெயர் குறிப்பிடப்பட்டு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இந்த விடயம் சம்பந்தமாக நாம் உள்ளக விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம்.

இதனைவிடவும் குற்றப்புலனாய்வுப் பிரிவிடம் ஜனாதிபதி செயலகமும் முறைப்பாடு செய்துள்ளது. ஆகவே விரைவில் ஆராய்ந்து உண்மையை வெளிப்படுத்துவோம்“ என நீதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# மின்சார ஊழியர் வெட்டி கொலை!

கொழும்பு, ஜூன் 09

களுத்துறை பிரதேச சபையின் மின்சார ஊழியர் ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர் களுத்துறை பனாபிட்டியவைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான சுகத் பிரசன்ன என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இன்னும் கைது செய்யப்படவில்லை என பொலிஸார் கூறினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய முதலீட்டாளர்கள் கொழும்பு பங்குச்சந்தையில் முதலிட ஊக்குவிப்பு

## தூதுவர் சந்தோஷ் ஜா தகவல்



கொழும்பு, ஜுன் 0

**எதிர்காலத்தில் இந்திய நிறுவனங்கள் மற்றும் முதலீட்டாளர்களைக் கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்க எதிர்பார்த்துள்ளதாக இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற மாநாடொன்றில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-எதிர்காலத்தில் கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்ய மேலும் பல இந்திய நிறுவனங்களை ஊக்குவிக்க நான் எதிர்பார்க்கிறேன்.

இது இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் ஒரு படியாகும்.

இது ஒத்துழைப்பை மேம்படுத்தவும் உதவும்.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் உறுதியான நிலைகளை அடையும்போது, அதனூடாக அதிக இந்திய முதலீடுகளை ஈர்க்க முடியும்.

முதலில் இங்கு எழும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி, இந்திய முதலீடுகளை அதிகரிப்பது சந்தை நம்பிக்கையை வளர்க்கும் ஆற்றலையும் கொண்டிருக்கும்.

அந்த ஸ்திரத்தன்மை ஒரு பிரகாசமான மற்றும் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்ட நிதியியல் சூழலை உருவாக்கும்.

அசைக்க முடியாத அர்ப்பணிப்புடன் இந்தியா, இலங்கையை ஆதரிக்கிறது- என்றார். (அ)

# பொசன் பௌர்ணமியை முன்னிட்டு 3,500 பொலிஸ் அதிகாரிகள் பணியில்

கொழும்பு, ஜுன் 09

பொசன் பௌர்ணமி விழாவுக்காக இன்று முதல் அநுராதபுரம், மிஹிந்தலை மற்றும் அட்டமஸ்தானத்துக்கு வருகை தரும் பக்தர்களின் பாதுகாப்புக்காக 3,500 பொலிஸ் அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

போக்குவரத்தை நிர்வகிக்கவும், பக்தர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், இந்த வழிபாட்டுத் தலங்களை அடிப்படையாகக் கொண்ட குளங்களைச் சுற்றி ஏற்படும் விபத்துகளைத் தடுக்கவும் இந்த பாதுகாப்பு ஏற்பாடு செயல்படுத்தப்படும்.

பிளாஸ்ரிக், பொலித்தீன் போன்ற சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் பொருட்களைக் கொண்டு வருவதைத் தவிர்க்கவும், திருடர்களிடமிருந்து தங்கள் மதிப்புமிக்க சொத்துக்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# ரயில் பணியாளர் பற்றாக்குறைக்கு தீர்வு காண அரசாங்கம் நடவடிக்கை!

## பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன



கொழும்பு, ஜுன் 09

ரயில் பணியாளர்களின் பற்றாக்குறைக்கு தீர்வுகாண அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார்.

பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன கோட்டை ரயில் நிலையத்துக்கு சென்றபோதே ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ரயில் பணியாளர்கள் பற்றாக்குறை பிரச்னை என்பது பல வருடங்களாக இடம்பெற்று வருகின்றது. இந்த பிரச்னைக்கு தீர்வு காண அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஒன்றரை வருட காலத்துக்கு பின்னர் ரயில் பணியாளர் பற்றாக்குறை தொடர்பான பிரச்னைகள் தீரும் என நம்புகின்றோம். எவ்வாறிருப்பினும் ரயில் சேவைகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

ரயில்வே திணைக்களம் முன்னெடுக்கும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் அரசாங்கம் தலையிட முடியாது.

ரயில்வே திணைக்களத்துடன் இணைந்து கலந்துரையாடினால் இந்த பிரச்னைகள் முடிவடையும் என நம்புகின்றோம்- என்றார். (அ)

# ரணிலின் தனி தொழிலாளர் சட்டமூலத்தை மீண்டும் கொண்டுவர அரசாங்கம் முயற்சி!

கொழும்பு, ஜுன் 09

8 மணிநேர வேலை மணித்தியாலத்தை ரத்து செய்வதற்காக ரணில் விக்கிரமசிங்க கொண்டுவந்த சட்டமூலத்தை, மீண்டும் கொண்டு வருவதற்கான பேச்சுவார்த்தைகளை இந்த அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

இதனை ஒரு அடிமைச் சட்டம் என தற்போதைய தொழில் அமைச்சர் மகிந்த ஜயசிங்க முன்னதாக தெரிவித்த காணொளிகள் சமூக ஊடகங்களில் தற்போதும் பகிரப்படுகின்றன.

குறைந்தது 7 பேரைக் கொண்டு தொழிற்சங்கமொன்றை ஆரம்பிக்க முடியும்.

எனினும், இந்த வரையறையைக் குறித்த சட்டமூலம் ஊடாக மனுஷ நாணயக்கார, 100 பேர் என்றவாறு அதிகரிக்க முயன்றார். இவ்வாறான மாற்றம் ஏற்படுமாயின், ஒருபோதும் தொழிற்சங்கம் ஒன்றை ஆரம்பிக்க முடியாது.

தற்போது, ஊழியர் ஒருவர் பணிநீக்கம் செய்யப்படுமிடத்துக்கு, அதற்கு எதிராக உடனடியாக தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பிப்பதற்குத் தொழிற்சங்கங்களுக்கு இயலுமை உண்டு.

எனினும், குறித்த சட்டமூலத்தில் பணிப்புறக்கணிப்பு ஒன்றை மேற்கொள்வதாயின், 30 நாட்களுக்கு முன்னதாக அறிவிக்கவேண்டும் என்ற விதிகள் உள்ளன.

இதனூடாக தொழிலாளர்களின் உரிமைகள் வெளிப்படையாக மீறப்படுவதுடன், இது முற்று முழுதாக தொழிலாளர்களுக்கு எதிரான ஒரு சட்டமாகும்.

இதனை அரசாங்கம் கொண்டுவரமுயற்சிக்குமாயின், ஒவ் வொரு நிறுவனமாகச் சென்று இது குறித்து பிரசாரம் செய்வதற்கும் தங்களது தரப்பு தயா ராக உள்ளதாக, முன்னிலை சோஷலிசக் கட்சி பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார். (அ)

# வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் அதிகரிப்பு

கொழும்பு, ஜுன் 09

வெளிநாட்டுப் பணம் அனுப்புதல் வீதம் இந்த ஆண்டு 18.2 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட தரவுகளின்படி, 2025 ஆம் ஆண்டில் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் அனுப்பிய பணம் 641.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது 2024 ஆம் ஆண்டில் 544.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

ஜனவரி முதல் மே வரையிலான காலகட்டத்தில் மொத்த பணம் அனுப்புதல் 3,102.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது.

இது கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 2,624.4 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது. இது ஆண்டுக்கு ஆண்டு 18.2 வீத அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது.- என்றுள்ளது. (அ)

# மழை அதிகரிக்கும் அபாயம்!

கொழும்பு, ஜுன் 09

நாளை முதல் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் மழையுடனான வானிலை அதிகரிக்கும் அபாயம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

நாட்டை சுற்றியுள்ள கடல் பகுதிகளில் அவ்வப்போது பலத்த காற்று வீசக்கூடும் என குறிப்பிட்டுள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் பல தடவைகள் மழை பெய்யும் என்றும் வடக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும், அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு, வடமத்திய, வடமேற்கு மற்றும் தென் மாகாணங்களிலும், திருகோணமலை மாவட்டத்திலும் அவ்வப்போது மணிக்கு 30-40 கி.மீ வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# ஜனாதிபதி, சிறைச்சாலை திணைக்களம் முரண்பட்ட அறிக்கைகள் உண்மை எது?

கொழும்பு, ஜுன் 09

நிதி மோசடி குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டு, தண்டனை பெற்ற நபருக்கு மன்னிப்பு வழங்கப்பட்டதாக கூறப்படும் விவகாரம் தொடர்பில் அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-கடந்த காலத்தில் நிதி மோசடியில் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட டபிள்யூ எச். அதுல திலகரத்ன என்பவருக்கு ஜனாதிபதியினால் மன்னிப்பு வழங்கப்பட்டதாக சமூக ஊடகங்களில் பரவிய செய்தி, நாட்டில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதைத் தொடர்ந்து, ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், அவர் உத்தியோகபூர்வ ஜனாதிபதி மன்னிப்பு பட்டியலில் இடம்பெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு ஏற்ப" இந்த விடுதலை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறியுள்ளது.

ஜனாதிபதி தரப்பினதும் சிறைச்சாலை திணைக்களத்தினதும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தகவல்கள் மக்களில் குழப்பத்தையும் நம்பிக்கையிழப்பையும் உருவாக்குகின்றன. மன்னிப்பின் சட்டப்பூர்வ நிலை பற்றி தெளிவாக தகவல் இல்லாத சூழ்நிலையில், மக்கள் யாரை நம்புவது?

சட்டத்தின் மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையை பாதுகாப்பது அரசின் பொறுப்பு. குற்றங்களை விட, அவற்றை மறைத்தல் மிகப்பெரிய சமூகத் தீமையாகும்.

எனவே, இந்த விடுதலைக்கான முழுமையான ஆதாரங்களும், தீர்மானங்களும் பொது மக்களுக்கு வெளிப்படையாக தெளிவுபடுத்தப்பட வேண்டும்- என்றார். (அ)

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜுன் 09

மட்டக்குளி பொலிஸ் பிரிவின் சமித்புர பகுதியில் ரி-56 துப்பாக்கி மற்றும் 29 தோட்டாக்களுடன் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு வடக்கு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகள் குழுவினால் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மட்டக்குளி பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயதுடையவர்.

கொழும்பு வடக்கு பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகம் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இதற்கிடையில், அத்திமலே பொலிஸ் பிரிவின் வரகனாட்ட பகுதியில் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி மற்றும் கோடாவுடன் ஒரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அத்திமலே வெவ பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயதுடையவர்.

சிலாபம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழு ஒன்று, கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சோதனை நடத்தி, துப்பாக்கி வைத்திருந்த சந்தேக நபரைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பங்கதெனியா பகுதியைச் சேர்ந்த 54 வயதுடையவர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சாரக் கட்டண அதிகரிப்பு பரிந்துரைகள் இந்த வாரத்தில்!

கொழும்பு, ஜூன் 09

மின்சாரக் கட்டணத்தை 18.3 வீதம் அதிகரிக்கும் இலங்கை மின்சார சபையின் திட்டம் தொடர்பான தனது பரிந்துரைகளை, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இந்த வாரம் வெளியிடவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை முடிவடைந்த பொதுக் கருத்துக்காலத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஒன்பது மாகாணங்களில் இருந்தும் கருத்துக்களை சேகரித்தது.

பொது முன்மொழிவுகள், இலங்கை மின்சார சபையின் சமர்ப்பிப்பு மற்றும் மின்சார உற்பத்திச் செலவுகள் குறித்த அறிக்கைகளை மதிப்பிட்ட பிறகு பரிந்துரைகள் வழங்கப்படும் எனவும், இந்த ஆய்வு இறுதிக் கட்டத்தில் இருப்பதாகவும் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# இன்று முதல் விசேட ரயில் சேவை

கொழும்பு, ஜூன் 09



பொசன் விழாவை முன்னிட்டு, பல விசேட ரயில் சேவைகளை இயக்க ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

கொழும்பு கோட்டையில் இருந்து அனுராதபுரம் வரை 20 ரயில் பயணங்களும், அனுராதபுரத்தில் இருந்து மிஹிந்தலை வரை 36 ரயில் பயணங்களும் இயக்கப்படவுள்ளதாகவும், இவை அனைத்தும் ஒரு தனியார் நிறுவனத்தின் முழு நிதி ஆதரவுடன் இயக்கப்படுவதால், இந்த அனைத்து ரயில் பயணங்களும் பயணிகளுக்கு இலவசமாக வழங்கப்படவுள்ளதாகவும் ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

இந்த விசேட ரயில் சேவைகள் இன்று முதல் எதிர்வரும் 12ஆம் திகதி வரை இயக்கப்படவுள்ளதாகவும், இதனுடன் இணைந்து தங்குமிட வசதிகள் மற்றும் பிற வசதிகளை மேம்படுத்துவதற்கும் ரயில்வே திணைக்களம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதன்படி, அனுராதபுரத்துக்கு செல்லும் பக்தர்களுக்காக பல இடங்களில் தங்குமிட வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த வசதிகளை ரயில் நிலையங்கள் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் ரயில்வே பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். (அ)

# இந்தியாவுடன் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் நாட்டுக்குத் தெரியாது!

## அஜித் பி பெரேரா கருத்து

கொழும்பு, ஜூன் 09

**இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் அரசாங்கம் இன்னும் பாராளுமன்றத்துக்கோ நாட்டுக்கோ தெரியப்படுத்தவில்லை. அவ்வாறெனில் அரசாங்கம் செய்யக்கூடாத ஒன்றை செய்துள்ளதா? தெரிந்தோ தெரியாமலோ எமது தாய் நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா கேள்வியெழுப்பியுள்ளார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-இந்தியாவுடன் எத்தனை புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன? அவற்றின் உள்ளடக்கங்கள் எவ்வாறானவை? அவற்றுக்கு சட்டமா அதிபரின் அனுமதி கிடைக்கப் பெற்றதா? அல்லது அமைச்சரவை அனுமதி கிடைத்ததா? அவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதா என்பது தொடர்பில் நாம் தொடர்ச்சியாக கேள்விகளை முன்வைத்தோம்.

கடந்த வாரம் பிரதமரிடம் இது குறித்து கேள்வியெழுப்பினோம்.

ஆனால் பிரதமருக்கு பதிலாக சபை முதல்வர் எழுந்து தம்வசம் தகவல்கள் இல்லை என்றும், அதற்கு சற்று கால அவகாசம் வேண்டும் என்றும் கூறினார்.

நாட்டில் பரவலான பேசுபொருளாக அமைந்த இந்த விவகாரம் தொடர்பில் தம்மிடம் தகவல் இல்லை என சபை முதல்வர் கூறுவது புதுமையாக வுள்ளது.

பிறிதொரு நாட்டுடன் செய்து கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பினாலும், எழுப்பாவிட்டாலும் அவை தொடர்பான புரிதல்கள் அமைச்சர்களுக்கு இருக்க வேண்டும்.

தகவல் அறியும் உரிமை சட்டத்தின் ஊடாக இந்த ஒப்பந்தங்களின் பிரதிகளை ஜனாதிபதி செயலகத்திடம் கோரியபோது, தம்வசம் அவை இல்லை என்ற பதிலே வழங்கப்பட்டது.

எதற்காக இது குறித்த தகவல்கள் மறைக்கப்படுகின்றன? எமது கேள்விக்கு பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம் இருந்தும் பிரதமர் ஏன் அதனைப் புறக்கணிக்கின்றார்? அவ்வாறெனில் அரசாங்கம் செய்யக்கூடாத ஒன்றை செய்துள்ளதா? தெரிந்தோ தெரியாமலோ எமது தாய் நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதா?

பாராளுமன்றத்தில் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பான ஆவணங்களை சமர்ப்பித்து, அவை குறித்த விவாதங்களை நிறைவுக்கு கொண்டு வர முடியுமல்லவா? ஆனால் அதற்கான தைரியம் அரசாங்கத்துக்கு இல்லை.

பாராளுமன்றத்தில் பல சந்தர்ப்பங்களில் நாம் இது குறித்து கேள்வியெழுப்பியிருக்கின்றோம்.

பொதுமக்களும் இது தொடர்பில் கேள்வியெழுப்புகின்றனர் என்பதை அரசாங்கமும் அறியும்.

மறைக்கக் கூடியவாறான உள்ளடக்கங்கள் இந்த ஒப்பந்தங்களில் காணப்படுகின்றமை கவலைக்குரியதாகும்.

323 கொள்கலன்கள் விவகாரத்திலும் அரசாங்கம் இவ்வாறு தான் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

அனைத்து விடயங்களிலும் தலையிடும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த விடயத்தில் அமைதியாகவுள்ளார்.

அறிக்கையை தயாரித்துக் கொண்டிருப்பதாகவும், அறிக்கை சமர்ப்பிக்கப்படும் வரை காத்திருக்குமாறும் கூறுகின்றனர்.

ஆனால் அந்த அறிக்கையை தயாரிப்பது சுயாதீன குழு அல்ல.

அரசாங்கத்தின் அமைச்சர்களே அக்குழுவில் உள்ளனர்.

அவர்கள் தமக்கு ஏற்றாற் போல அதனை தயாரித்துக் கொள்வர்.

எனவே அதில் கூறப்படும் விடயங்களை முழுமையாக ஏற்க முடியாது-என்றார். (அ)

# வாகனங்களை ஒழுங்குபடுத்த முன் கலந்துரையாடலை நடத்தவேண்டும்

கொழும்பு, ஜூன் 09

தனியார் பஸ்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பாடசாலை போக்குவரத்து வாகனங்களை ஒழுங்குபடுத்துவதற்கு முன்னதாக, நிலவும் பிரச்சனைகள் குறித்து கலந்துரையாடல் நடத்துமாறு போக்குவரத்து சங்கங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதேவேளை, அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் அகில இலங்கை பாடசாலை மாணவர் போக்குவரத்து சங்கத்தின் தலைவர் மல்சிறி டி சில்வா தெரிவித்தார்.

தனியார் பஸ்கள், முச்சக்கர வண்டிகள், பாடசாலை மாணவர் போக்குவரத்து வாகனங்கள் உள்ளிட்ட பல போக்குவரத்து முறைகளை ஒழுங்குபடுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், இதற்கான அனைத்து அதிகாரங்களையும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க அண்மையில் பாராளுமன்றத்தில் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார்.

இதன்படி, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு திருத்த சட்டமூலம் சமீபத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதோடு, தனியார் பஸ்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் பாடசாலை மாணவர் போக்குவரத்து வாகனங்கள் உட்பட பல போக்குவரத்து முறைகளை ஒழுங்குபடுத்த தேவையான வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# நாட்டில் டெங்கு நோயாளர்கள் எண்ணிக்கை 23,000 ஐ கடந்தது

கொழும்பு, ஜூன் 09

இந்த ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் நாட்டில் மொத்தமாக 23,744 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

மாதாந்த டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த மார்ச் மாதத்தில் 3,766 நோயாளர்களும் ஏப்ரல் மாதத்தில் 5,166 நோயாளர்களும் மே மாதத்தில் 6,042 நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் அதிக எண்ணிக்கையிலான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதனிடையே இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில் 13 டெங்கு தொடர்பான மரணங்களும் பதிவாகியுள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

பருவமழை தொடங்குவதால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்து, டெங்கு நோய் பரவல் மேலும் அதிகரிக்கக் கூடும் என சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கின்றனர். (அ)

# பொலிஸ் அதிகாரிகளை அச்சுறுத்திய பெண் கைது

கொழும்பு, ஜூன் 09



கைது செய்ய வந்த பொலிஸ் அதிகாரிகளை அச்சுறுத்திய குற்றச்சாட்டுக்காக அழகு நிலைய ஊழியரான 24 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டதாக வதுரம்ப பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் அவரது நண்பரின் வீட்டில் இருப்பதாக வதுரம்ப பொலிஸூக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அவரை கைது செய்யச் சென்ற அதிகாரிகளை அச்சுறுத்தியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதையடுத்து, கைது செய்யப்பட்ட பெண் சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# காலாவதியான கிறீம் வகைகளை விற்ற 2 கடைகள் சுற்றிவளைப்பு!

கொழும்பு, ஜூன் 09

சமூக ஊடகங்கள் ஊடாக காலாவதியான கிறீம் வகைகளை விற்பனை செய்து வந்த இரு கடைகளை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் சுற்றிவளைத்துள்ளனர்.

கொழும்பு இராஜகிரிய ஒபேசேகரபுர மற்றும் அம்பகஹ சந்தி ஆகிய பகுதிகளில் உள்ள இரு கடைகளையும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் சுற்றிவளைத்துள்ளனர்.

இந்த இரு கடைகளின் உரிமையாளர், வெளிநாட்டில் தயாரிக்கப்படும் கிறீம் வகைகளின் காலாவதி திகதியை மாற்றி அதனை சமூக ஊடகங்கள் ஊடாக விற்பனை செய்து வந்துள்ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த இரு கடைகளிலும் இருந்த அனைத்து கிறீம் வகைகளையும் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பில் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைக்கவசம் அணியாது பயணித்த 55 பேர் கைது!

காத்தான்குடி, ஜூன் 09

மட்டக்களப்பு, காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள்களில் பயணித்த 55 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலையபொறுப்பதிகாரி ஐ. ரத்நாயக்க தெரிவித்தார்.

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமை குறித்து பிரதேசவாசிகள் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் கவனத்துக்கு கொண்டுசென்றதையடுத்து குறித்த சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை காத்தான்குடி கடற்கரை மற்றும் ஆற்றங்கரை பிரதேசங்களுக்கு பெருநாள் தொழுகைக்காக சென்ற அதிகமான இளைஞர்கள் தலைக்கவசம் அணியாது சென்றுள்ளனர்.

தலைக்கவசம் அணியாதவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்கின்ற அறிவித்தலை பொலிஸார் முன்பே விடுத்திருந்த போதிலும் அவற்றை உதாசீனம் செய்து தலைக்கவசம் அணியாது பயணித்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிள் செலுத்திய 21 வயது இளைஞன் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதியில் விபத்துக்குள்ளாகி உயிரிழந்தார்.

மேலும், தலைக்கவசம் அணியாது கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# 150 லீற்றர் கசிப்புடன் சம்பூரில் இருவர் கைது



சம்பூர், ஜூன் 09

திருகோணமலை, சம்பூர் பொலிஸ் பிரிவிலுள்ள கன்னங்குடா கலப்பை அண்டிய காட்டுப்பகுதியில் இயங்கி வந்த கசிப்பு உற்பத்தி நிலையத்தை சம்பூர் பொலிஸார் முற்றுகையிட்டு பெருந்தொகை கசிப்பை பறிமுதல் செய்தனர்.

இதன்போது 30 ஆயிரம் லீற்றர் கோடா, 150 லீற்றர் கசிப்புடன் 30 மற்றும் 33 வயதுடைய இருவரை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களை மூதூர் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை சம்பூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ)

# காரைதீவில் களைகட்டிய பச்சை கட்டல் சடங்கு



காரைதீவு, ஜூன் 09

வரலாற்று பிரசித்தி பெற்ற காரைதீவு சிறீ கண்ணகை அம்மன் கோவிலின் வருடாந்த திருக்குளிர்த்தி சடங்கு விழாவின் பச்சை கட்டல் விழா களைகட்டியது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பச்சை கட்டல் சடங்குடன் பகல் வேளை பூஜை மிகச் சிறப்பாக நிறைவுற்றது.

நேற்று முன்தினம் இறுதி நாள் பச்சை கட்டல் சடங்கிற்காக பல அடியார்கள் தாமாகவே முன்வந்து பச்சை காய்கறிகளை தயார் செய்தனர்.

அவற்றையெல்லாம் ஒரே பாத்திரத்தில் இட்டு சமைப்பது பச்சை கட்டலின் சிறப்பம்சமாகும்.

பகல் பூஜை நிறைவுற்றதும் ஆலயத்துக்கு வரும் ஆயிரக்கணக்கான அடியார்களுக்கு பகல் பிரசாதமாக இந்த பச்சை கட்டல் சாதம் வழங்கப்படுவது வழமையாகும்.

இதேவேளை பகல் இரவு பூஜைகளில் ஆயிரக்கணக்கான அடியார்கள் கலந்து கொண்டு வருகின்றனர்.

இன்று திங்கட்கிழமை மடிப்பிச்சை ஊர்வலமாக எடுத்துச் சென்று ஆலயத்தில் நெல்குற்றி பொங்கலிடுவது வழமையாகும்.

# சம்மாந்துறையில் சுற்றிவளைப்பு மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல்

சம்மாந்துறை, ஜூன் 09

சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தலைக்கவசம் அணியாமை சாரதி அனுமதிப்பத்திரம் இன்மை மற்றும் போக்குவரத்து சட்ட திட்டங்களை மீறியமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் சம்மாந்துறை பொலிஸார் நேற்று முன்தினம் சனிக்கிழமை பலரை கைது செய்தனர்.

அத்தோடு கைது செய்யப்பட்டவர்களின் மோட்டார் சைக்கிளையும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் பறிமுதல் செய்தனர்.

சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் உள்ளிட்ட சான்றுப் பொருட்கள் என்பன சட்ட நடவடிக்கைக்காக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.



நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை வேளையில் மாத்திரம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 10 வீதி விபத்துக்கள் இடம்பெற்றன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# தமிழ் அரசுக் கட்சியினர் நேற்று சத்தியப்பிரமாணம்

திருகோணமலை, ஜூன் 09

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய மற்றும் பட்டியல் ஆசனங்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்ட இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் நேற்று திருகோணமலையில் உள்ள மாவட்ட கட்சி பணிமனையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.

கட்சியின் மாவட்ட தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சண்முகம் குகதாசன் முன்னிலையில் உறுப்பினர்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர்.



இம்முறை நடைபெற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலில் குச்சவெளி, தம்பலகாமம், வெருகல், மூதூர், திருகோணமலை மாநகர சபை, திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை ஆகிய பகுதிகளில் தமிழ் அரசுக் கட்சி சார்பில் வேட்பாளர்களாக களமிறக்கப்பட்டு போட்டியிட்டிருந்தனர். இதில் திருகோணமலை மாநகர சபையின் முதல்வராக தமிழ் அரசுக் கட்சியை சார்ந்த ஒருவர் நியமிக்கப்படவுள்ளார். (எ)

# மட்டக்களப்பு விபத்தில் 21 வயது இளைஞன் பலி

மட்டக்களப்பு, ஜூன் 09

மட்டக்களப்பு ஆரையம்பதி 5ஆம் கட்டைப் பகுதியில் இடம்பெற்ற கோர விபத்தில் காத்தான்குடியைச் சேர்ந்த 21 வயது இளைஞன் உயிரிழந்தார்.

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி 5ஆம் கட்டை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்னால் உள்ள சந்தியில் இரவு 10 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இந்த விபத்தில் புதிய காத்தான்குடி 06 ஆலிம் வீதி தோணா சந்தியைச் சேர்ந்த அ. அப்துல் லாஹ் என்ற இளைஞனே உயிரிழந்தார்.



வானும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது. குறித்த வானில் அக்கரைப்பற்றை சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலா சென்று திரும்பிக்கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றது.

குறித்த விபத்தில் 21 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைகளுக்காக மட்டக்களப்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் கொடூரத் தாக்குதல் காஸாவில் 75 பேர் உயிரிழப்பு



காஸா, ஜூன் 09

**காஸாவில் நிவாரண உதவிக்காக காத்திருந்தோர் மீது இஸ்ரேல் நடத்திய கொடூரத் தாக்குதலில் 75 பேர் உயிரிழந்தனர். இது இனப்படுகொலை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.**

இஸ்ரேல் மீது கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் கொடூரத் தாக்குதல் நடத்தினர். இதில், இஸ்ரேல் கடுமையாக பாதிக்கப்பட்டது. ஆயிரக்கணக்கானோரை ஹமாஸ் அமைப்பினர் கொன்று குவித்தனர். நூற்றுக்கணக்கானோரை பணயக் கைதிகளாக சிறை பிடித்து சென்றனர்.

இதனைத் தொடர்ந்து காஸாவுக்கு எதிரான போரில் இஸ்ரேல் ஈடுபட்டது. ஓராண்டுக்கு மேலாக நடந்து வரும் இந்தத் தாக்குதலில் இதுவரை 54 ஆயிரத்து 772 பலஸ்தீனியர்கள் உயிரிழந்தனர். ஓர் இலட்சத்து 25 ஆயிரம் பேர் காயமடைந்தனர். இதனை காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், போர் நிறுத்த ஒப்பந்த அடிப்படையில் இஸ்ரேல் கைதிகள் மற்றும் பலஸ்தீனிய கைதிகள் பரஸ்பரம் விடுவிக்கப்பட்டனர். இந்த முதல்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் மார்ச் முதலாம் திகதியுடன் முடிவடைந்தது.

முதல்கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவடைந்த சூழலில் 2ஆவது கட்ட போர் நிறுத்த ஒப்பந்தம் பற்றிய பேச்சுவார்த்தை தொடங்குவதற்கு ஹமாஸ் அமைப்பு விருப்பம் தெரிவித்திருந்தது. ஆனால், அதில் உடன்பாடு ஏற்படவில்லை.

இதனால், காஸா முனைப் பகுதியில் இஸ்ரேல் முழு அளவில் தீவிரத் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில், நிவாரண உதவி பெறுவதற்காக காத்திருந்த 8 பலஸ்தீனியர்கள் உட்பட 70இற்கும் மேற்பட்ட மக்கள் பலியாகினர்.

இஸ்ரேலின் இந்த கொடூரத் தாக்குதலில் நேற்று முன்தினம் ஒரே நாளில் 75 பேர் பலியாகினர். இது இனப்படுகொலை என குற்றச்சாட்டு எழுந்துள்ளது. காஸா நிவாரண உதவிக்கான அறக்கட்டளை, அதன் பணியைத் தொடங்கியதிலிருந்து, உணவுப் பொருட்களைப் பெறுவதற்காக காத்திருந்தவர்கள் மீது நடந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண் ணிக்கை 118 ஆக உயர்ந்தது. (எ)

## மணிப்பூரில் மீண்டும் பதற்றம்: இணையதள சேவை துண்டிப்பு

இம்பால், ஜூன் 09

இந்தியாவின் மணிப்பூரில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், இணையதள சேவை துண்டிக்கப்பட்டுள்ளது.

மணிப்பூர் மாநிலத்தில் மெய்தி - குகி இனக்குழுக்களுக்கு இடையே கடந்த 2023ஆம் ஆண்டு மே மாதம் முதல் மோதல் வெடித்துள்ளது. இந்த மோதலில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். வன்முறையை கட்டுப்படுத்த தவறியதற்காக முதலமைச்சர் பைரன் சிங் பதவி விலகினார். இதையடுத்து, அங்கு ஜனாதிபதி ஆட்சி அமுல்படுத்தப்பட்டு பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் தற்போது அமைதி திரும்பியுள்ளது.

இந்த நிலையில், மெய்தி இனத்தை சேர்ந்த அரம்பாய் தெங்கோல் என்ற குழுவின் தலைவர் கண்ணன் சிங் உட்பட 6 பேரை மணிப்பூர் பொலிஸார் நேற்று முன்தினம் இரவு கைது செய்தனர்.

இதை எதிர்த்து மெய்தி மக்கள் போராட்டம், வன்முறையில் ஈடுபட்டனர். வன்முறையை தடுக்க பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டனர். இதனால், மணிப்பூரில் பதற்றமான சூழ்நிலை நிலவுகிறது. இதேவேளை, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மணிப்பூரில் 5 மாவட்டங்களில் இணையதள சேவை நேற்று முன்தினம் இரவு 11. 45 மணி முதல் துண்டிக்கப்பட்டுள்ளது. (எ)

## கானாவில் குரங்கம்மை 45 பேருக்கு பாதிப்பு உறுதி

அக்ரா, ஜூன் 09

கானாவில் 45 பேருக்கு குரங்கம்மை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கானாவில் 2022ஆம் ஆண்டு குரங்கம்மை தொற்று பாதிப்பு தொடங்கியது. இதன்பின்னர் தீவிர நடவடிக்கையால் அதன் பரவல் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்த நிலையில், கடந்த மாதத்தில் 45 பேருக்கு குரங்கம்மை பாதிப்பு ஏற்பட்டுள்ளது என அந்த நாட்டு சுகாதார சேவை அமைப்பு அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

இதனால், இந்த முறை நிலைமை மோசமடைந்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அளவுக்கு பாதிப்பு எண்ணிக்கை அதிகரித்தபோதிலும் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை. (எ)

## அவுஸ்திரேலிய கடல் பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம்

சிட்னி, ஜூன் 09

அவுஸ்திரேலியாவின் தெற்கு கடற்பகுதியில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. அதிகாலை 04. 50 மணியளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.1 ஆக பதிவாகியுள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த சக்தி வாய்ந்த நில அதிர்வால் அப்பகுதி மக்கள் பெரும் அச்சத்தில் உள்ளனர். நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை. (எ)

வெளியேறியவர்கள் திரும்பி வரலாம்

## ஆப்கான் மக்களுக்கு தலிபான் அழைப்பு

காபுல், ஜூன் 09

ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியவர்கள் திரும்பி வரலாம். பொதுமன்னிப்பு வழங்கப்படும் என்று தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2021ஆம் ஆண்டு தலிபான்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, அங்குள்ள ஆயிரக்கணக்கான உள்ளூர்வாசிகள் அமெரிக்க அரசு, ஊடகம் மற்றும் மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வந்தனர். அங்கு தலிபான் ஆட்சி அமைந்த பிறகு அமெரிக்காவுக்கு உதவி செய்தவர்கள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறினர். இவர்களில் சிலர் பாகிஸ்தானில் தஞ்சமடைந்தனர்.

அவ்வாறு ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியவர்களை அமெரிக்காவில் குடியமர்த்துவதற்கான சிறப்புத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. இதனிடையே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், ஆப்கானிஸ்தான் உட்பட 12 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழையத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளார். இதனால், அமெரிக்காவுக்கு உதவி செய்தவர்கள் மீண்டும் ஆப்கானிஸ்தானுக்கு செல்ல வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

அங்கு சென்றால் தலிபான்கள் தங்களுக்கு மரண தண்டனை விதிக்கக் கூடும் என்ற அச்சம் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால், பயணத் தடை உத்தரவை நீக்க வேண்டும் என அமெரிக்காவுக்கு உதவிய ஆப்கானிஸ்தான் மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியவர்கள் நாடு திரும்பலாம் எனவும் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும் தலிபான்கள் அறிவித்துள்ளனர். பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு இந்த அறிவிப்பை தலிபான் அரசின் பிரதமர் முகமது ஹாசன் வெளியிட்டுள்ளார். ஆப்கானிஸ்தானுக்கு திரும்பி வருபவர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என்றும் உறுதியளிப்பதாக அவர் கூறியுள்ளார். (எ)

# ட்ரம்ப் குறித்த சர்ச்சைக்குரிய பதிவை நீக்கிய எலான் மஸ்க்



வாஷிங்டன், ஜூன் 09

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குறித்த சர்ச்சைக்குரிய பதிவை எலான் மஸ்க் நீக்கியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதியாக 2ஆவது முறையாக பதவியேற்ற ட்ரம்ப், நிர்வாக ரீதியாக பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதன் ஒரு பகுதியாக அமெரிக்க அரசு நிர்வா கத்தில் செலவு குறைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் துறையின் தலைமை ஆலோசகராக டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களின் தலைமை இயக்குநரும் பெரும் தொழிலதிபருமான எலான் மஸ்க்கை நியமித்தார்.

இவருடைய ஆலோசனையின் பேரில், அமெரிக்க அரசு பணிகளில் ஆட்குறைப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டது.

மேலும் சர்வதேச அளவில் அமெரிக்க அரசு சார்பில் பல்வேறு திட்டங்க ளுக்காக வழங்கப்பட்டு வந்த நிதி உதவிகள் இரத்துச் செய்யப்பட்டன.

இந்த நிலையில், அமெரிக்காவின் செனட் அவையில், பொருளாதார செலவீனங்களை மாற்றி அமைக்கும் வகையில் புதிய சட்ட திருத்தம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மின்சார வாகன உற்பத்தி நிறுவனங்க ளுக்கான வரி சலுகைகளை இரத்து செய்யும் அம்சம் இடம் பெற்றுள்ளது. இதனால் அதிருப்தியடைந்த எலான் மஸ்க், ட்ரம்பின் இந்த சட்ட திருத்தம் அருவருப்பானது என்று சாடியிருந்தார்.

இந்த விவகாரத்தில் ட்ரம்புக்கும் எலான் மஸ்கிற்கும் இடையே வார்த்தை மோதல் வெடித்தது.

இது தொடர்பாக எலான் மஸ்க், "நான் இல்லையென்றால் ட்ரம்பால் வெற்றி பெற்றிருக்க முடியாது. ட்ரம்ப் நன்றியுணர்வு அற்றவர்" என்று விமர்சித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பை தகுதி நீக்கம் செய்ய வேண்டும் எனவும் துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸை அந்தப் பொறுப்பில் நியமிக்க வேண்டும் என்று கூறினார்.

இதற்கிடையில், பாலியல் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஜெப்ரி எப்ஸ்டீன் தொடர்பான ஆவணங்களில் ட்ரம்பின் பெயர் உள்ளதால் அது இன்று வரை வெளியிடப்படாமல் உள்ளது என்று பகிரங்க குற்றச்சாட்டை எலான் மஸ்க் முன்வைத்தார்.

அவரது குற்றச்சாட்டு அமெரிக்க அரசியல் களத்தில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இதே சமயம், அரசின் செலவினங்களை குறைக்க எலான் மஸ்க்கின் நிறுவனத்துக்கு வழங்கப்பட்டு வரும் மானியங்கள், சலுகைகள் உள்ளிட்டவை நிறுத்தப்படும் என்று ட்ரம்ப் பகிரங்கமாக மிரட்டல் விடுத்தார்.

தொடர்ந்து எலான் மஸ்க் தனது "எக்ஸ்" வலைத்தள பக்கத்தில், "புதிய கட்சியை உருவாக்குவதற்கான நேரம் வந்துவிட்டதா?" என வாக்கெடுப்பு ஒன்றை நடத்தினார்.

இதனால் எலான் மஸ்க் புதிய கட்சி தொடங்கப் போகிறாரா? என்ற கேள்வி எழுந்தது.

இந்த நிலையில், ஜெப்ரி எப்ஸ்டீன் தொடர்பான ஆவணங்களில் ட்ரம்பின் பெயர் உள்ளதாக கூறி "எக்ஸ்" தளத்தில் வெளியிட்ட பதிவை எலான் மஸ்க் தற்போது நீக்கியுள்ளார்.


இதனால், இருவருக்கும் இடையிலான வார்த்தை மோதல் முடிவுக்கு வந்துவிட்டதா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

முன்னதாக எலாஸ் மஸ்கின் குற்றச்சாட்டு குறித்து பேசிய ட்ரம்ப், "எலான் மஸ்க் என்னை எதிர்ப்பது எனக்கு பிரச்னை இல்லை.

ஆனால், அவர் இதை பல மாதங்களுக்கு முன்பே செய்திருக்க வேண்டும்" என்று கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ்: கோகோ காப் சம்பியன்



பாரிஸ், ஜூன் 09

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் பரபரப்பான ஆட்டத்தில் அரினா சபலெங்காவை வீழ்த்தி கோகோ காப் சம்பியனானார்.

"கிராண்ட்ஸ்லாம்" போட்டிகளில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் தொடர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இதில், நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் நம்பர் 1 வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலெங்கா அமெரிக்காவின் கோகோ காப் உடன் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதல் 2 செற்களை ஆளுக்கொன்றாக கைப்பற்றினர். இதனால் 3ஆவது செற் பரபரப்புக்குள்ளானது. மிகுந்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் நடைபெற்ற 3ஆவது செற்றை கோகோ காப் கைப்பற்றினார்.

இறுதியில் இந்த ஆட்டத்தில் கோகோ காப் 6-7, 6-2 மற்றும் 6-4 என்ற செற் கணக்கில் சபலெங்காவை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றார். இந்தத் தொடரில் கோகோ காப் சம்பியன் பட்டம் வெல்வது இதுவே முதல் முறையாகும். (எ)

## இழப்பீடு தொகை அதிகரிப்பு

பெங்களூரு, ஜூன் 09

பெங்களூருவில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இழப்பீடு தொகை இலங்கை மதிப்பில் 87 இலட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் 18ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் இறுதிப்போட்டி கடந்த 3ஆம் திகதி நடைபெற்றது. இதில் பஞ்சாப் கிங்ஸை தோற்கடித்து றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு (ஆர்.சி.பி.) அணி முதல் முறையாக கிண்ணத்தை வென்று மகுடம் சூடியது. இதற்கு மறுநாள் (4ஆம் திகதி) பெங்களூரு விதானசவுதாவில் விராட் கோலி உள்ளிட்ட வீரர்களுக்கு கர்நாடக அரசு சார்பில் பாராட்டு விழாவும் சின்னசாமி மைதானத்தில் வெற்றிக் கொண்டாட்டமும் நடைபெற்றது. இதில், இலட்சக்கணக்கானோர் பங்கேற்றனர். அப்போது, ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் பலியாகினர். இந்தச் சம்பவம் இந்தியா முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது.

இதேவேளை, உயிரிழந்த 11 பேரின் குடும்பத்துக்கும் தலா 10 இலட்சம் ரூபாய் (இலங்கை மதிப்பில் 34 இலட்சம் ரூபாய்) வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு அறிவித்த இழப்பீடு தொகையை 87 இலட்சம் ரூபாயாக உயர்த்தி கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா அறிவித்துள்ளார். (எ)

## "சுதர்சன் ஆரம்ப வீரராக களமிறங்க வேண்டும்"

சிட்னி, ஜூன் 09

புதிய இந்திய டெஸ்ட் அணியில் தமிழக வீரர் சாய் சுதர்சன் தொடக்க வீரராக களமிறங்க வேண்டும் என்று அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் ரிக்கி பொண்டிங் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, சாய் சுதர்சனுக்கு டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமாக இதுதான் சரியான நேரம் என்று நினைக்கிறேன்.

ஜெய்ஸ்வாலுடன் கே.எல். ராகுலை தொடக்க வீரராக களமிறக்காமல் சாய் சுதர்சனை களமிறக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன்.

ஏனெனில் இடதுகை ஆட்டக்காரரான சாய் சுதர்சன் தற்போது மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார்.

அதுமட்டுமின்றி அவருடைய ஆட்ட நுணுக்கம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கு நிச்சயம் ஏதுவாக இருக்கும்.

இதேபோன்று கே. எல். ராகுல் அல்லது கருண் நாயர் போன்ற வீரர்களில் ஒருவர் மூன்றாவது இடத்தில் விளையாடலாம்.

கே.எல். ராகுலை பொறுத்தவரை அவர் மிகப்பெரிய அனுபவம் வாய்ந்த வீரர். இதனால் அவர் நடு வரிசையில் விளையாடினால் இந்திய அணிக்கு உறுதித் தன்மை கிடைக்கும்.

எனவே சாய் சுதர்சனை தொடக்க வீரராகவும் கே. எல். ராகுலை இடையில் இறக்கினால் அது இந்திய அணிக்கு நல்லது என்று நினைக்கிறேன்- என்றார்.

இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

4ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சிக்கு உட்பட்ட தொடர் இது என்ப தால் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (எ)

## 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து அசத்தல் வெற்றி




லண்டன், ஜூன் 09

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதல் ரி - 20 போட்டியில் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் மற்றும் 3 ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ஒருநாள் தொடரை 3 - 0 என இங்கிலாந்து கைப்பற்றியது.

இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான ரி - 20 தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்து 188 ஓட்டங்கள் குவித்தது. இங்கிலாந்து தரப்பில் அதிரடியாக ஆடிய ஜோஸ் பட்லர் 96 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் ரொமாரியோ ஷெப்பர்ட் 2 விக்கெட்கள் வீழ்த்தினார்.

தொடர்ந்து 189 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய மேற்கு இந்திய தீவுகள் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 167 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. இதன் மூலம் 21 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. மேற்கு இந்திய தீவுகள் தரப்பில் அதிகபட்சமாக எவின் லூயிஸ் 39 ஓட்டங்கள் எடுத்தார்.

இங்கிலாந்து தரப்பில் லியாம் டாசன் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் 1-0 என இங்கிலாந்து முன்னிலையில் உள்ளது. (எ)

## பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ்: இறுதியில் அல்காரஸ்



பாரிஸ், ஜூன் 09

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் இறுதிப்போட்டிக்கு கார்லஸ் அல்காரஸ் முன்னேறியுள்ளார்.

ஆண்டின் 2ஆவது "கிராண்ட்ஸ்லாம்" தொடரான பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள இந்த தொடரில் ஆண்களின் ஒற்றையர் பிரிவி அரையிறுதி ஆட்டத்தில் இத்தாலி வீரர் லோரென்சோ முசெட்டி - ஸ்பெயின் வீரர் கார்லஸ் அல்காரஸ் ஆகியோர் மோதினர்.

பரபரப்பான இந்த ஆட்டத்தில் முதல் செற்றை லோரென்சோ முசெட்டி கைப்பற்றினார். 2ஆவது மற்றும் 3ஆவது செற்றை அல்காரஸ் கைப்பற்றினார். 4ஆவது செற்றில் 2 - 0 என அல்காரஸ் முன்னிலையில் இருந்தபோது லோரென்சோ முசெட்டிக்கு காயம் ஏற்பட்டது . காயம் காரணமாக அவர் போட்டியிலிருந்து வெளியேறினார். இதனால் அல்காரஸ் இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். (எ)

## இந்தியா - இங்கிலாந்து முதல் டெஸ்ட் 20ஆம் திகதி

லண்டன், ஜூன் 09

இந்தியா - இங்கிலாந்து இடையிலான முதல் டெஸ்ட் போட்டி 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி அடுத்ததாக இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது. 4ஆவது உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் சுழற்சிக்கு உட்பட்ட தொடர் இது என்பதால் இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இத்தகைய சூழலுக்கு மத்தியில் இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதல் டெஸ்ட் எதிர்வரும் 20ஆம் திகதி லீட்சில் தொடங்கவுள்ளது.

இந்தத் தொடரில் பங்கேற்பதற்காக இந்திய அணி கடந்த 6ஆம் திகதி இங்கிலாந்துக்கு புறப்பட்டு சென்றது.

இங்கிலாந்து சென்ற இந்திய அணி லோர்ட்சில் நேற்று பயிற்சியை தொடங்கியது. இது குறித்த வீடியோவை பி. சி. சி. ஐ. தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ளது. (எ)

## கோகோ காப்புக்கு 86 கோடி ரூபா பரிசு

பாரிஸ், ஜூன் 09

பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடரில் சம்பியனான கோகோ காப்புக்கு இலங்கை மதிப்பில் 86. 13 கோடி ரூபாய் பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டுள்ளது.

"கிராண்ட்ஸ்லாம்" என்ற உயரிய அந்தஸ்து பெற்ற பிரெஞ்ச் ஓபின் ரென்னிஸ் தொடர் பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வருகிறது. இதில், மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிப்போட்டியில் கோகோ காப் - சபலெங்கா மோதினர்.

இதில் சம்பியன் பட்டம் வென்ற கோகோ காப்புக்கு 86. 13 கோடி ரூபாயும் 2ஆவது இடத்தை பிடித்த அரினா சபலெங்காவுக்கு 43. 5 கோடி ரூபாய் பரிசுத் தொகையாக வழங்கப்பட்டது. (எ)

## புரோ ஹொக்கி லீக்: நெதர்லாந்துக்கு எதிராக இந்திய அணி தோல்வி



ஆம்ஸ்டர்டாம், ஜூன் 09

புரோ ஹொக்கி லீக் தொடரில் நெதர்லாந்துக்கு எதிரான போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்தது.

2024 - 25ஆம் ஆண்டுக்கான புரோ ஹொக்கி லீக் போட்டி பல்வேறு நாடுகளில் நடைபெற்று வருகிறது. இதில் நெதர்லாந்தில் உள்ள ஆம்ஸ்டெல்வீனில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்தியா - நெதர்லாந்து அணிகள் மோதின.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நெதர்லாந்து அணி 2 - 1 என்ற கோல் கணக்கில் இந்தியாவைத் தோற்கடித்தது. நெதர்லாந்து தரப்பில் வான் டேம் திஜ்ஸ் 2 கோல்கள் அடித்தார். இந்திய அணியில் ஹர்மன்பிரீத் சிங் ஒரு கோல் அடித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணிகள்...

முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராது விடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அரசாங்கத்தின் காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின்கீழ் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட 2430 எனும் இலக்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இருப்பினும் அவ் வர்த்தமானி அறிவித்தலை முழுமையாக வாபஸ் பெற வேண்டும் எனக்கோரி வலுப்பெற்ற எதிர்ப்பை அடுத்து, அவ் வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அதனை இரத்துச் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் தற்போதுவரை வெளியிடப்படவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இவ் வர்த்தமானி அறிவித்தல் எப்போது இரத்துச்செய்யப்படும் என குறித்த திகதியொன்றை அறிவிக்குமாறு குறுந்தகவல் ஊடாக நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவிடம் தான் கோரியிருப்பதாகவும், இதுபற்றி இன்று திங்கட்கிழமை பிரதமர் ஹரினி அமரசூரியவுடன் பேசவிருப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார். (அ)

## மாகாண...

அவ்வாறு வருகை தருகின்றபோது உள்நாட்டில் பல்வேறு தரப்பினருடனும் கலந்துரையாடல்களை நடத்துவது இயல்பானது.

அவ்வாறான நிலையில், வடக்கு-கிழக்கு தமிழ் அரசியல், சிவில் பிரமுகர்கள் இந்த விடயத்தினை தமக்குச் சாதகமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டியது மிக முக்கியமானதொரு விடயமாகும்.

தற்போதைய நிலையில் ஆட்சியில் உள்ள அரசாங்கம் அதிகாரப் பகிர்வு தொடர்பாகவோ, பொறுப்புக்கூறல் தொடர்பாகவே எவ்விதமான கரிசனைகளையும் கொண்டிருப்பதாக வெளிப்படுத்தவில்லை.

அவ்வாறான நிலையில் மாகாண சபைகளுக்கான தேர்தலே அதிகாரப் பகிர்வுக்கான ஆரம்பமாக இருக்கின்றது. அது எட்டு ஆண்டுகளாக நடத்தப்படாது இருக்கும் நிலையே காணப்படுகின்றது.

டில்லிக்கும், கொழும்புக்கும் இடையிலான உறவுகளால் மாகாண சபைகளுக்கான வலியுறுத்தல் பிரதமர் மோடியின் விஜயத்தில் காணாமலாக்கப்பட்டுள்ளது. இது மிகப்பாரதூரமான விடயமாகும்.

ஆகவே, ஐ.நா. ஆணையாளர் இலங்கைக்கு வருகின்ற சந்தர்ப்பத்தில் இந்த நாட்டில் அனைத்துப் பிரச்னைகளுக்கும் அரசியல் ரீதியான தீர்வுதான் அடிப்படையாக இருக்கின்றது என்பதை உணர்த்துவதோடு, மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தவதற்கான அழுத்தங்களை பிரயோகிக்குமாறே கூட்டுக் கோரிக்கை முன்வைக்க வேண்டும். அதன் மூலமாகவே சுயாட்சி, அதிகாரப் பகிர்வு, பொறுப்புக்கூறல் உள்ளிட்ட தமிழ் மக்களின் நீண்டகாலக் கோரிக்கைகளை நோக்கி நகரமுடியும். இதனை விடுத்து, பொறுப்புக்கூறல் விடயத்தை முன்வைக்கின்றபோது தென்னிலங்கையில் மீண்டும் தேசியவாத சக்திகள் தீவிரமாக தலையெடுக்கும்.

அவ்விதமான சூழல் ஏற்பட்டால் அரசங்கம் சுயாட்சி என்பதை உச்சரிக்க முடியாத அளவுக்கு கடுமையாக நடந்துகொள்வதற்கு வாய்ப்புக்களே அதிகமுள்ளன. காரணம், பாராளுமன்ற பெரும்பான்மை மற்றும் நிறைவேற்று அதிகாரம் அதற்கு காரணமாகின்றன. ஆகவே ஐ.நா. ஆணையாளரின் வருகையை, எதிர்காலத்தை மையப்படுத்தி பயன்படுத்துவதற்கு தீர்மானிக்க வேண்டும்-என்றார். (அ)

## ஐ.நா...

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடைபெற வுள்ள மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரிலேயே இலங்கை தொடர்பில் ஆணையாளரின் வாய்மொழிமூல அறிக்கை வெளியிடப்படவிருப்பதுடன், புதிய தீர்மானமொன்றைக் கொண்டுவருவது குறித்தும் ஆராயப்படும் என கூறப்படுகிறது. (அ)

## நேரில்...

வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கம் கடிதம் மூலம் கோரியுள்ளது.

இது தொடர்பில் வடக்கு-கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தநடராஜாவினால் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினராகிய நாம் நீதி கோரி சுமார் 3000 நாட்களுக்கும் மேலாகத் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவருகின்றோம். அது யுத்தத்தின்போதும், அதன் பின்னரும் அரச படையினரால் அழைத்துச்செல்லப்பட்ட எமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்ளும் நோக்கில் உண்மையையும், அதற்குரிய பொறுப் புக்கூறலையும் கோருகின்ற எமது இயலாமையின் வெளிப்பாடாகும்.

பல ஆண்டுகளாக இப்போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 300 பேர் அதற்குரிய பதிலோ அல்லது நீதியோ கிட்டாமலே உயிரிழந்துவிட்டனர். ஆனால் எமது வயோதிபம் மற்றும் உணர்வு ரீதியான சோர்வுக்கு மத்தியிலும் நாம் நீதியைக்கோரி அமைதியான முறையில் போராடிவருகின்றோம்.

கடந்த 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்பேரவையின் 37ஆவது கூட்டத்தொடரிலிருந்து பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாம் ஜெனீவாவுக்குச்சென்று உரையாற்றியிருப்பதுடன், எமது எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட தரப்பினருக்கு விளக்கமளித்து வந்திருக்கின்றோம். உண்மை, நீதி மற்றும் பொறுப்புக் கூறலை அடைவதே எப்போதைக்குமான எமது அசைக்க முடியாத இலக்காக இருந்திருக்கின்றது.

அரசாங்கத்தின் அழைப்பின்பேரில் நீங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதி நாட்டுக்கு வருகைதரவிருப்பதை நாமறிவோம். இருப்பினும் உங்களது இவ்விஜயம் ஜூன் மாதம் ஆரம்பமா கவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத்தொடருக்கு மத்தியில் இடம்பெறவிருப்பதனால், அது எம்மத்தியில் தீவிர கரிசனைகளைத் தோற்றுவித்திருக்கின்றது. குறிப்பாக ஜெனீவாவில் உங்களைச் சந்திப்பதற்கு நாம் பல தடவைகள் முயற்சித்த போதிலும், அது சாத்திய மாகாத நிலையிலேயே இவ் விஜயம் தொடர்பான எமது கரிசனைகள் வலுப்பெற்றிருக்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் உங்களது இலங்கை விஜயத்தின்போது உங்களைச் சந்திப்பதற்கு இடமளிக்குமாறு கோருகின்றோம். நாம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 59 ஆவது கூட்டத்தொடரில் கலந்துகொள்வதைத் தவிர்த்து, நாட்டில் இருப்பதன் ஊடாக உங்களை நேரடியாகச் சந்தித்துப் பேசமுடியும் எனக் கருதுகின்றோம்.

அவ்வாறானதொரு சந்திப்பு நாங்கள் முகங்கொடுத்துவரும் யதார்த்த சூழ்நிலையையும், எமது வலிகளையும் உங்களுக்கு எடுத்துரைப்பதற்கு வாய்ப்பளிக்கும் என எதிர்பார்க்கின்றோம்.

அதேபோன்று சுமார் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கக்கூடும் என நம்பப்படும் இறுதி யுத்தம் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறும் உங்களிடம் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (அ)

## வடக்கு மாகாணத்தில் ஜூன் 16 வரை மழை!

யாழ்ப்பாணம், ஜூன் 09

வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு எதிர்வரும் 10 நாட்களுக்கு பிற்பகலில் அல்லது இரவு வேளைகளில் அவ்வப்போது மிதமான மழை கிடைக்கும் என யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைத் தலைவர் கலாநிதி நாகமுத்து பிரதீபராஜா குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில்-

காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக நேற்று முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரை வடக்கு மாகாணத்தின் சில பகுதிகளுக்கு பிற்பகலில் அல்லது இரவு வேளைகளில் அவ்வப்போது மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நண்பகல் வரை மிகவும் வெப்பமான வானிலை நிலவும். ஆனால், பிற்பகலுக்கு பின்னர் இடியுடன் கூடிய மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது - என குறிப்பிட்டுள்ளார். (அ)

## கொரோனா...

காட்டிலும், வேறு எந்த அறிகுறிகளையும் கொண்டிராதமையினால் சுவாச நோய்களில் ஒன்றாக கொரோனா வகைப்படுத்தப்படுகிறது.

எனவே, சுவாச நோய்களைக் கொண்டிருக்கும் ஒருவர், சுவாசிப்பதில் சிரமத்தை எதிர்கொண்டால் மாத்திரமே மருத்துவ சிகிச்சைகளைப் பெறுவது பொருத்தமானதாக இருக்கும் - என்றார். (அ)

## 23ஆம் திகதி...

என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டேர்க், எதிர்வரும் 23ஆம் திகதி கொழும்பு வருகின்றார்.

26 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கி இருக்க திட்டமிட்டுள்ள அவர், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, வெளிவிவகார அமைச்சர், நீதி அமைச்சர் உட்பட அரச தரப்பினருடன் பேச்சு நடத்தவுள்ளார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் உறுப்பினர்களையும் கொழும்பில் சந்திப்பாரென எதிர்பார்க்கப்படுகின்றது.

அத்துடன், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சிவில் அமைப்புகளின் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் ஆகியோரையும் இவ் விஜயத்தின் போது ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சந்தித்து கலந்துரையாடவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் சிறுபான்மை கட்சிகளின் பிரதிநிதிகள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் என பல தரப்பு கலந்துரையாடலையும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மலையக சிவில் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின்போது, மலையக மக்கள் பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளுக்கு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நேரில் சென்று, நிலைமைகளை ஆராய உள்ளதுடன், போரின்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்திக்கவுள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதக் கூட்டத்தொடரில் இலங்கை குறித்து வலுவான தொரு தீர்மானம் பிரிட்டன் தலைமையில் முன்வைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராக பதவி வகித்த நவநீதம்பிள்ளை அம்மையார், இதற்கு முன்னர் இலங்கை வருகை தந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதன்போது அவர் முள்ளிவாய்க்கால் செல்வதற்கு முற்பட்டார் எனவும், அந்த கோரிக்கையை மகிந்த அரசாங்கம் நிராகரித்தது எனவும் அப்போது தகவல்கள் வெளியாகின. (அ)

## செம்மணி...

நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் நடைபெற்றுவரும் அகழ்வில் இதுவரை 19 மனித எலும்புக்கூடுகள் பகுதியளவிலும், முழுமையாகவும் மீட்கப்பட்டுள்ள நிலையில் குறித்த விடயம் சம்பந்தமாக அரச தரப்பின் நிலைப்பாடு குறித்து வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரியாலை - செம்மணிப் பகுதியில் முன்னெடுக்கப்படும் அகழ்வாராய்ச்சியின்போது கண்டறியப்படும் அனைத்து மனித எச்சங்களும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும். அதன்பின்னர் பகுப்பாய்வு அறிக்கைகளின் பிரகாரமே அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கூற முடியும்.

நீதிமன்றத்தின் அனுமதியில் குறித்த பகுதியில் தொடர்ச்சியாக அகழ்வு நடவடிக்கைகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அதுகுறித்து வழக்குகளும் நீதிமன்றில் நிலுவையில் உள்ளன. ஆகவே, நீதிமன்றம்தான் இறுதியான முடிவினை எடுக்கும்.

எவ்வாறாயினும் உண்மைகள் கண்டறியப்படுவதற்காக தொடர்ச்சியான அகழ்வுப் பணிகளுக்காக நீதி வழங்கள் உள்ளிட்ட அனைத்து தொழில்நுட்ப உதவிகளையும் அரச தரப்பில் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதோடு, விசேட கரிசனைகளையும் கொண்டிருக்கின்றோம் - என்றார். (அ)

## புதிய...

போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஜனக ராஜகருணா, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர்களான கருணைநாதன் இளங்குமரன், சண்முகநாதன் சிறிபவானந்த ராஜா, ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீவன், பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர். (அ)

## ஆட்சியின்...

பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குற்றச் செயல்கள் மற்றும் நிறுவனங்களில் ஏற்படும் குழப்பங்களின் கூர்மையான அதிகரிப்புக்கு ஆளும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைக் குற்றம் சாட்டிய நாமல் ராஜபக்ஷ, நாட்டின் சட்டம் மற்றும் ஒழுங்கில் “முழுமையான சீர்குலைவு” ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

அவர் தனது எக்ஸ் பதிவொன்றில், சமீபத்திய மாதங்களில் நாடு முழுவதும் வெளிப்பட்ட தொடர்ச்சியான குழப்பகரமான சம்பவங்கள் குறித்து குறிப்பிட்டுள்ளார்.

“ஜனவரி மாதத்திலிருந்து 50 பகல் நேர துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன” என்று அவர் கூறியுள்ளார்.

இத்தகைய சூழ்நிலைகளில் பொது மக்களின் பாதுகாப்பைப் பராமரிக்க அரசாங்கத்தின் திறனைச் சுட்டிக்காட்டி அவர் கேள்வி எழுப்பினார்.

ஜனவரி மாதம் 323 கொள்கலன்கள் முறையான ஆய்வு இல்லாமல் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் ஊழலையும் நாமல் எடுத்துரைத்தார்.

“இந்த கொள்கலன்களில் சர்ச்சைக்குரிய பொருட்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது. அரசாங்கம் தொடர்ந்து பொறுப்புக்கூறலை மறுக்கிறது,” என்று அவர் கூறினார்.

சர்ச்சையை மேலும் அதிகரிக்கும் வகையில், நிதி மோசடியில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஒரு கைதிக்கு வெசாக் பண்டிகையின்போது ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியதாகக் கூறப்படுவதையும் நாமல் குறிப்பிட்டுள்ளார்.

“சிறை அதிகாரிகள் சுதந்திரமாக செயல்பட்டார்கள் என்று இது அர்த்தப்படுத்துகிறதா?” என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அரச கால்நடை வைத்தியர்கள் போராட்டத்தில் ஈடுபட முடிவு!

## விவசாய அமைச்சு செயலருக்கு எதிராக

கொழும்பு, ஜூன் 09

**அரசாங்க கால்நடை வைத்தியர்கள் சங்கம் இன்று காலை 6:00 மணி முதல் 24 மணி நேர அடையாள வேலைநிறுத்தத்தை முன்னெடுக்க முடிவு செய்துள்ளது.**

கால்நடை வைத்தியர்களுக்கான தனியான சேவை யாப்பை தயாரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், அதனை நாசப்படுத்த விவசாய அமைச்சின் செயலாளர் தொடர்ந்து முயற்சிப்பதால் வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாக சங்கம் சுட்டிக்காட்டுகிறது.

இதன் விளைவாக, அனைத்து அரசாங்க கால்நடை அலுவலகங்களின் பணிகளும் பாதிக்கப்படுவதுடன், மிருகக்காட்சிச்சாலை திணைக்களம், வனவிலங்கு திணைக்களம், துறைமுகம், விமான நிலையங்களில் உள்ள விலங்கு தனிமைப்படுத்தல் மையங்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களில் உள்ள கால்நடை வைத்தியர்களின் சேவைகளும் பாதிக்கப்படும் என்று அரசாங்க கால்நடை வைத்தியர்கள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் உப்புல் ரஞ்சித் குமார தெரிவித்துள்ளார். (அ)

# ஜேர்மன் செல்கிறார் ஜனாதிபதி!

கொழும்பு, ஜூன் 09

மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க எதிர்வரும் 11 ஆம் திகதி ஜேர்மனிக்கு விஜயம் செய்யவுள்ளார். இந்த விஜயத்தில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உட்பட அரச அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

இந்த விஜயத்தின்போது ஜேர்மன் ஜனாதிபதி உட்பட அந்நாட்டின் முக்கிய அரச தலைவர்கள் மற்றும் ஜேர்மன் வாழ் இலங்கை சமூகத்தினரை சந்தித்து கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை ஜனாதிபதி அநுரவின் ஜேர்மன் விஜயத்தின்போது புதுப்பிக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளது. (அ)

# காங்கேசன் ரயில் நிலையத்திலிருந்து பொதி போக்குவரத்து சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 09

காங்கேசன்துறை ரயில் நிலையத்தில் பொதிகள் போக்குவரத்து சேவை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அத்தோடு ரயில் நிலையத்தில் பயணிகள் ஓய்வு அறையில் நூலகம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டது.

இதன்போது ரயில் நிலைய வளாகத்தில் மரக்கன்றுகளும் நடப்பட்டன.

இந்த நிகழ்வில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடி, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், சண்முகநாதன் சிறிபவானந்தராஜா, ஜெயசந்திரமூர்த்தி ரஜீவன், ரயில் நிலைய அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டனர். (அ)



# குகைக்குள் பெண்ணின் சடலம்: சந்தேகநபர் உயிரை மாய்த்தார்

கொழும்பு, ஜூன் 09

மொனராகலை, தொம்பகஹவெல பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் ஒரு குகையில் பெண் ஒருவரின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து, சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகிக்கப்படும் 27 வயதான நபர், தன் உயிரை மாய்த்து கொண்டுள்ளார். அவரது சடலம் கைப்பற்றப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனவரி மாதத்தில் தான் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்திருந்த, திருமணமாகாத 52 வயதுடைய பெண் ஒருவரின் சடலமே ஜூன் 5 ஆம் திகதியன்று கைப்பற்றப்பட்டது. சந்தேக நபர் ஜூன் 2 ஆம் திகதியில் இருந்து பிரதேசத்தை விட்டு தலைமறைவாகி இருந்தார். அந்த நபரின் சடலம், மரமொன்றில் தொங்கிக் கொண்டிருந்த நிலையில் கைப்பற்றப்பட்டது.

# ஜனாதிபதியின் பொதுமன்னிப்பு பட்டியலில் இல்லாதோர் விடுவிப்பு

## விசாரணையில் அம்பலம்

கொழும்பு, ஜூன் 09

ஜனாதிபதியின் பொது மன்னிப்பை சட்டவிரோதமாகப் பயன்படுத்தி, வேறு கைதிகளை விடுவித்தது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மேற்கொண்ட விசாரணை குறித்து, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கடந்த வெசாக் பௌர்ணமி தினத்தையொட்டி பொது மன்னிப்பு வழங்கும் திட்டத்தின் கீழ், அனுமதிக்கப்பட்ட கைதிகளுக்கு மேலதிகமாக, சில கைதிகளை சிறைச்சாலை நிர்வாகம் சட்டவிரோதமாக மன்னிப்பு வழங்கி விடுவித்ததாகக் கருதப்படும் சந்தேகநபர்கள் தொடர்பாக, கடந்த 06 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தால் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு முறைப்பாடு ஒன்று அனுப்பப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டின் அடிப்படையில், குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விரிவான விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திடம் அது குறித்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ஆவணங்களைப் பரிசீலித்து அவரிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் படி, இந்த பொது மன்னிப்பு சட்டவிரோதமாகப் பயன்படுத்தப்பட்டு, கடந்த வெசாக் தினத்தன்று சில கைதிகள் விடுவிக்கப்பட்டிருப்பது விசாரணைகளின் மூலம் தெரியவந்து கொண்டிருப்பதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு சட்டவிரோதமாக ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட கைதிகள் தொடர்பாக, சம்பந்தப்பட்ட சிறைச்சாலை அதிகாரிகள் உள்ளிட்ட அனைத்து தொடர்புடைய அதிகாரிகளுக்கு எதிராகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த விசாரணையில், இதற்கு முன்னரும் இவ்வாறு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் விடுவிக்கப்படவிருந்த கைதிகளில் அனுமதி பெறப்படாத கைதிகளும் விடுவிக்கப்பட்டிருப்பது தொடர்பான தகவல்களும் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, இது தொடர்பாக எதிர்காலத்தில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படும் என்றும், நீதிமன்றத்தால் குற்றவாளிகளாகத் தீர்ப்பளிக்கப்பட்ட நபர்களை சிறைச்சாலைகளில் இருந்து சட்டவிரோதமாக விடுவிப்பது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# "அபிவிருத்தியே மக்களின் முதன்மை தேவை"

யாழ்ப்பாணம், ஜூன் 09

எமது மக்களுக்கு வேறு விடயங்கள் இருந்தாலும் அபிவிருத்தி முக்கியம். அதனை உணர்ந்து அன்றே செயல்பட்டவர் தான் செனட்டர் பொ. நாகலிங்கம். அதனால் தான் அவரால் சுன்னாகம் பொதுச்சந்தை மற்றும் சுன்னாகம் பொது நூலகம் என்பனவற்றை அபிவிருத்தி செய்ய முடிந்தது. இப்போதும் எமது மக்களுக்கு அபிவிருத்தி முக்கியம் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

சுன்னாகம் பட்டினத்தின் சிற்பியும் தொழிற்சங்கவாதியுமான செனட்டர் பொ. நாகலிங்கத்தின் திருவுருவச் சிலையை திறந்து வைக்கும் நிகழ்வும் சுன்னாகம் பிரதேச சபை முன்றலில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர், சிலையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# மெக்கோ கிளி திருட்டு!

கொழும்பு, ஜூன் 09

தெஹிவளை மிருகக்காட்சிச்சாலையில் உள்ள கூண்டிலிருந்து 500,000 ரூபாவுக்கும் அதிக பெறுமதியான நீலம் மற்றும் மஞ்சள் நிற மெக்கோ கிளி ஒன்று கடந்த 4ஆம் திகதி இரவு திருடப்பட்டுள்ளது.

இது மிருகக்காட்சிச்சாலைக்கு அருகிலுள்ள வர்த்தக நிலையத்தில் பொருத்தப்பட்டிருந்த பாதுகாப்பு கமெராவில் பதிவாகியுள்ளது. குறித்த கூண்டில் இருந்த 30 கிளிகளில் ஒன்று திருடப்பட்டுள்ளது.

கூண்டின் பராமரிப்பாளர் மறுநாள் காலை பணிக்காகச் சாவியுடன் கூண்டைத் திறக்கச் சென்றபோது, அதைப் பாதுகாக்க நிறுவப்பட்ட பாதுகாப்புப் பூட்டு உடைக்கப்பட்டிருப்பதைக் கவனித்து, இது குறித்து மிருகக்காட்சிச் சாலையின் உயர் அதிகாரிகளுக்குத் தெரிவித்தார்.

பின்னர் நடத்தப்பட்ட விசாரணையின்போது, கூண்டிலிருந்து நீலம் மற்றும் மஞ்சள் நிற மெக்கோ கிளி ஒன்று காணாமல்போனதை அதிகாரிகள் கண்டறிந்தனர்.

பின்னர், இது குறித்து நிர்வாகம், ஒரு பாதுகாப்பு அதிகாரி மூலம் தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்தது. (அ)

# அரலகங்வில பகுதியில் நீரில் மூழ்கி 4 பேர் பலி!

கொழும்பு, ஜூன் 09

பொலன்னறுவை - அரலகங்வில பகுதியில் உள்ள ஆற்றில் மூழ்கி நான்கு பேர் உயிரிழந்துள்ளனர். பால - எல்ல ஆற்றில் நீராடச் சென்ற நான்கு பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்கள் இரத்மலானை பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் அரலகங்வில பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# சிமெந்து விலை உயர்வு!

கொழும்பு, ஜூன் 09

50 கிலோ கிராம் சிமெந்து மூடையின் விலையை அதிகரிக்க சிமெந்து நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

நேற்று முன் தினம் முதல் இந்த விலை உயர்வு அமுலுக்கு வந்துள்ளது.

50 கிலோ கிராம் சிமெந்து மூடையின் மொத்த விலை அதிகரிக்கப்பட்டாலும், சில்லறை விலையில் எந்த திருத்தமும் செய்யப்படவில்லை என்று சிமெந்து நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

சிமெந்து உற்பத்தி செலவுகள் அதிகரித்ததே சிமெந்து விலை உயர்வுக்கு வழிவகுத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.06.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.